சித்தூர் மாவட்டம், நகரி வட்டம்,
ஏகாம்பரக்குப்பம் பேட்டை.

ஸ்ரீ சிவ சுப்பிரமணிய,
சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்.

வேத மொழிபெயர்ப்பு ஆசிரியர்,
காசி வாசி,

ஸ்ரீ. வீர. சிவானந்த யதிந்திர சுவாமிகள் சரித்திரம் (சுருக்கம்).



(ஸ்ரீ. வீர. சிவானந்த யதிந்திர சுவாமிகள்)

மேற்படி மடாலயம் மூன்றும் மடாதிபதி,
ஸ்ரீ. மகா. கோவிந்தசுவாமிகளால்,
தொகுத்து இயற்றப் பெற்றது.

வெளியீடு :
ஸ்ரீ. சிவ சுப்பிரமணிய,
சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்.
ஏகாம்பரக்குப்பம் பேட்டை.

 1986 [விலை ரூ. 3 - 00

சித்தூர் மாவட்டம், நகரிவட்டம், ஏகாம்பரக் குப்பம்பேட்டை.

ஸ்ரீ சிவ சுப்பிரமணிய, சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்.

வேத மொழிபெயர்ப்பு ஆசிரியர், காசி வாசி,

ஸ்ரீ. வீர. சிவானந்த யதிந்திர சுவாமிகள் சரித்திரம் (சுருக்கம்).



(ஸ்ரீ. வீர. சிவானந்த யதிந்திர சுவாமிகள்.)

மேற்படி மடாலயம் மூன்றும் மடாதிபதி,
ஸ்ரீ. மகா. கோவிந்த சுவாமிகளால் முன்னைய சரித்திர நூல்களிலிருந்து சுருக்கித் தொகுத்தும், முன்னைய சரித்திர நூல்களில் கூறப்படாத, பின்னைய சரித்திரம் சுருக்கித் தொகுத்தும் சேர்த்து, இயற்றப் பெற்றது.

வெளியீடு :

ஸ்ரீ. சிவ சுப்பிரமணிய,
சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்.
ஏகாம்பரக் குப்பம் பேட்டை.

வெளியீடு நாள் :

அக்ஷய வருஷம், ஐப்பசி மாதம், 29ஆம் தேதி (15—11—1986) சனி வாரம், பௌர்ணமி திதி, பரணி நக்ஷத்திரம் கூடிய சுப நாளாகிய, ஸ்ரீ. வீர. சிவானந்த யதிந்திர சுவாமிகளின் 42ஆம் ஆண்டு குருபூஜை விழா நாளில், வெளியீடு செய்யப் பெற்றது.

 1986 [விலை ரூ. 3—00

அ. 2

முதல் பதிப்பு :

14—4—1986

அக்ஷய ௵, சித்திரை ௴, 1 ௳.

வெளியீடு :

ஸ்ரீ சிவ சுப்பிரமணிய,

சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்.

K. V. P. R. பேட்டை

(குமார வெங்கிட பெருமாள் ராஜாப் பேட்டை)

ஏகாம்பரக் குப்பம் போஸ்டு

நகரி வட்டம்

சித்தூர் மாவட்டம் (ஆந்திரா பிரதேசம்).

Pin. 517 592.

அச்சிட்டோர் :

ஜோதி பிரிண்டர்ஸ்,

சின்னக்கடை வீதி, திருச்சி - 620 002.

போன் : 25416.

உ

ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள்
சரித்திரம் (சுருக்கம்).

முகவுரை.

உலகிலுள்ள சகல சீவர்களும் விரும்புவது, துக்க நிவிர்த்தியும், சுகப்பிராப்தியுமேயாகும்; என்பது யாவரும் உணர்ந்த விஷயமேயாகும்.

இத்தகைய நிலையையே மோக்ஷம் அதாவது பேரின்பவீடு; என்று அறிவிற் சிறந்த ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர்.

இத்தகைய மோக்ஷமாகிய பேரின்பவீடு அடைவதற்குச் சாதனமாக உள்ளது, ஆத்மஞானமாம்.

இத்தகைய ஆத்மஞானத்திற்குச் சாதனமாக உள்ளது, ஆத்ம அநாத்ம விசாரமாகிய "அஹம் பிரஹ்ம அஸ்மி" என்னும் அனுபூதி மகாவாக்கிய விசாரமாம்.

இத்தகைய அனுபூதி மகாவாக்கிய விசாரத்திற்குச் சாதனமாக உள்ளது, ஞானகுருவின் "தத் துவம் அசி" என்னும் உபதேச மகாவாக்கிய சிரவணமாம்; அதாவது உபதேச மகாவாக்கியத்தைக் கேட்டலாம்.

இத்தகைய உபதேச மகாவாக்கிய சிரவணம் செய்வதற்குச் சாதனமாக உள்ளது, 1. நித்திய அநித்திய வஸ்து விவேகம், 2. இகாமுத்திரார்த்த

பல போக விராகம், 3. சமாதி சட்க சம்பத்தி, 4. முமுட்சுத்துவம், என்னும் நான்கு சாதனங்களாகிய சாதன சதுட்டயத்தை அடைந்து, ஆத்ம ஞான உபதேசம் பெறுவதற்காக ஞானகுருவைச் சரணுகதி அடைதலாம்.

இத்தகைய ஞானகுருவைச் சரணுகதி யடையும் மனோநிலைக்கு ஆக்கந்தரும் சாதனங்கள் பலவற்றுள் ஒன்ருயுள்ளது, ஞானகுருவின் சரித்திரத்தை அறிவதாம்.

ஆகவே இத்தகைய ஞானகுருவாகிய ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சரித்திரத்தை அறியவேண்டும் என்னும் விருப்பமுள்ள அன்பர்கள், ஸ்ரீ சுவாமிகளின் சரித்திரம், அவர்கள் மொழிபெயர்த்த வேதங்களின் முன்பகுதிகளிலும், அவர்கள் இயற்றிய அவர்களின் ஞான குருவாகிய ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகளின் புராணங்களிலும் சேர்க்கப் பெற்றிருக்கின்றதே தவிரத் தனி நூலாக இல்லாமை யால், பலரும் அறிந்துகொள்ள ஏதுவில்லாமல் இருக் கின்றது. ஆகவே ஸ்ரீ சுவாமிகளின் சரித்திரத்தைத் தனிநூலாக அமைத்து வெளியீடு செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

அந்த அன்பர்களின் வேண்டுகோளை ஏற்றுச் சரித்திரம் சுருக்கமாக அமைய வேண்டும் என்னும் கருத்தால், ஸ்ரீ சுவாமிகள் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த, சாமவேத சம்ஹிதாபாகம், கிருஷ்ண எசுர் வேத சம்ஹிதா பாகம், ஆகியவற்றின் முன்பகுதிகளிலும், அவர்கள் இயற்றிய அவர்களின்

ஞான குருவாகிய ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் புராணங்களிலும் உள்ள சரித்திரத்தைச் சுருக்கமாகத் தொகுத்தும், அவற்றில் கூறப்படாத பிற்கால சரித்திரத்தைச் சுருக்கமாகத் தொகுத்தும் சேர்த்து, "ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் சரித்திரம் (சுருக்கம்)". என்னும் பெயரில், இந்நூலை இயற்றி வெளியீடு செய்கின்றேன்.

இந்த வெளியீடானது ஸ்ரீ சுவாமிகளின் சரித்திரத்தை அறிய விரும்பும் அன்பர்கட்கு, மகிழ்ச்சியை உண்டாக்கும் என நம்புகிறேன்.

ஸ்ரீ சுவாமிகளின் ஞானகுருவின் பெயர், ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் என்பது ஆதலால், அவர்களின் பெயரின் முன்பகுதியாகிய "வீர" என்னும் சொல்லை, முதலில் சேர்த்து ஸ்ரீ சுவாமிகட்கு, ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள்; என்று பெயர் கூறப்படுகிறது.

ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயமானது, ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயம் ஏற்பட்டபின், ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம் என வழங்கப் பெறுகிறது.

ஸ்ரீ சிவசுப்பிரமணிய
சிவானந்த யதீந்திர
சுவாமிகள் மடாலயம்.
K.V.P.R. பேட்டை.
ஏகாம்பரக் குப்பம்.
சித்தூர் மாவட்டம்.
(ஆந்திரா பிரதேசம்.)

இங்ஙனம்,

மகா. கோவிந்த சுவாமி.

3. ஆம் மடாதிபதி.


ஸ்ரீ வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் சரித்திரம்
(சுருக்கம்)

பக்க எண்	நூல் பிரிவு எண்	பொருளடக்கம்
அ.1		நூல் அறிமுகம்.
அ.2		பதிப்பும், பதிப்புக் காலமும்.
அ.3		முகவுரை.
அ.6		பொருளடக்கம்.
		படங்கள் 8.
ஆ 1		ஸ்ரீ கணபதி காப்பு.
,,		ஏகாம்பரக் குப்பம் பேட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம் பஞ்சமூர்த்திகள் துதி.
ஆ 2		ஏகாம்பரக் குப்பம் பேட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம், ஸ்ரீ ஆனைமுகக் கடவுளாகிய விநாயகக் கடவுள், ஸ்ரீ குமரக் கடவுள் துதி.
,,		ஸ்ரீ சிவசுப்பிரமணியர் திருப்புகழ்.
1	1	நாட்டுச் சிறப்பு.
2	2	ஊர்ச் சிறப்பு.
,,	3	குடிகளின் சிறப்பு.
,,	4	இவர்கட்கு அகமடியர் என்ற காரணப் பெயர் உண்டான வரலாறு.
3	5	அகமடித் தொண்டு என்பதின் பொருள் விளக்கம்.
4	6	இவர்கட்கு அகமடியர் என்னும் பெயருடன், தேவர்கள் என்னும் பெயரும் சேர்ந்து வழங்குவதற்குக் காரணம்.
,,	7	தாய் தந்தையர் இயல்பும் — பிறப்பும்.
5	8	நாமகரணம் (பெயரிடுதல்).


பக்க எண்	நூல் பிரிவு எண்	பொருளடக்கம்
6	9	தமிழ்க்கல்வி கற்றல்.
,,	10	ஸ்ரீ சுப்பிரமணியர் உபாசனை.
,,	11	அடியார் பெரியோர் முதலானவர்களிடம் அன்பு செய்தல்.
,,	12	பற்றின்றி இருத்தல்.
7	13	தவயோக நெறிகளைப் பயிலுதல்.
,,	14	சாதன சதுட்டயங்களை அடைதல்.
8	15	இலக்கண இலக்கிய நூல்களைக் கற்று, வேதாந்த ஞான நூல்களைக் கற்க விரும்புதல்.
,,	16	கோவிலூர் மடாலயம், ஸ்ரீ. வீரசேகர ஞான தேசிக சுவாமிகளை ஞானகுருவாக அடைதல்.
9	17	கலியபெருமாள், பிரம்மச்சரிய ஆசிரமியாக இருத்தலும், சிவானந்த சுவாமி என்னும் நாமம் பெறுதலும்.
10	18	வேதாந்த ஞான உபதேச பாடநூல்கள் கற்றுத் தேர்ச்சியடைதல்.
11	19	வடமொழியாகிய சமஸ்கிருதம் கற்க விரும்புதலும் ஸ்ரீ காசிப் பதியை அடைதலும்.
12	20	காசிப்பதியில் நிகழ்ச்சி.
13	21	தமிழ் நாட்டை அடைந்து, திருக்களர்க்ஷேத்திரம் சென்று, தமது குருநாதரை வணங்கித் துதித்து இருத்தல்.
14	22	திருக்களர் ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் புராணம் முதலிய நூல்கள் இயற்றி அரங்கேற்றுதலும், யதீந்திரர் என்னும் பெயர் பெறுதலும்.
16	23	உலக உபகாரம் செய்ய விரும்பித் திருத்தணி சென்றடைந்து, ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளை வணங்குதலும், பின் நிகழ்ச்சியும்.

பக்க எண்	நூல் பிரிவு எண்	பொருளடக்கம்
17	24	ஏகாம்பரக் குப்பம் பேட்டைக்கு வருதலும், பிற நிகழ்ச்சிகளும்.
19	25	ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம் அடிக்கல் நாட்டு விழாச் செய்தலும், பாட போதனைகள் செய்தலும்.
20	26	வெளியூர் சென்று தெய்வீக காரியங்கள் செய்து கொண்டிருத்தல்.
23	27	ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள் விதேக முக்தி அடைதல்.
24	28	ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் ஏகாம் பரக் குப்பம் பேட்டை ஆசிரமத்திற்கு வந்து தங்குதலும், ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமி கள் சீடராதலும்.
26	29	ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம் திறப்பு விழாச் செய்தல்.
27	30	ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயத் தில் வைக்கப்பெற்றுள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளின் திருவுருவங்கட்குப் பூசனை புரிதல்.
,,	31	ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் விதேக முக்தி அடைதல்.
29	32	சமாதி அமைப்பும், பூசைகள் புரிதலும்.
31	33	ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் இரண் டாம் மடாதிபதியாக இருந்து, பின் நிகழ்ச்சி கள் செய்தல்.
32	34	ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயத் திருப்பணி தொடங்குதலுக் காகப் பாலாலயம் அமைத்தல்.
33	35	ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயத் திருப்பணி தொடங்கிச் செய்தல்.

பக்க எண்	நூல் பிரிவு எண்	பொருளடக்கம்
,,	36	ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் விதேக முக்தி அடைதல்.
35	37	ஸ்ரீ. மகா. கோவிந்த சுவாமிகள் மூன்றாம் மடாதிபதியாக இருந்து, காரியங்களைச் செய்து வருதல்.
38	38	ஸ்ரீ. மகா. கோவிந்த சுவாமிகள் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்தல்.
40	39	ஸ்ரீ. மகா. கோவிந்த சுவாமிகள் மடாலய, சமாதியாலயங்களின் நிர்வாகம் செய்து வருதல்.
41	40	மகேசுவர பூசை நிலையம் அமைத்தலும், அதில் மகேசுவர பூசைகள் நடத்தலும்.
42	,,	மகேசுவர பூசை நிலையத்தின் கல்வெட்டின் நகல்.
,,	41	ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சீடர்கள், பக்தர்களின் நிலைமை.
43	42	ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் தாம் எழுதிய தமது சுய சரித்திரம்.
45	43	ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் தமிழில் இயற்றிய நூல்கள்.
48	44	ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்த நூல்கள்.
		(அநுபந்தம் — பின் சேர்ப்பு)
1		கைவல்லிய நவநீத நூலின் சிறப்பைக் குறிக்கும் அறிமுகம்.
3		ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் போற்றிப் பஞ்சகம்.
6		பிழை திருத்தம்.



வேத மொழிபெயர்ப்பு ஆசிரியர்
காசி வாசி
ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள்.



வேத மொழிபெயர்ப்பு ஆசிரியர்

காசி வாசி


ஸ்ரீ வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள்.



ஸ்ரீ வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின்

சமாதி ஆலய மூலஸ்தானமாகிய கர்ப்பக்கிரகத்தில் உள்ள

ஸ்ரீ. பாண சிவலிங்கத்தின் தோற்றம்.




ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின்
சமாதி ஆலய மகாமண்டபத்தில் உள்ள
ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ பாலசுப்பிரமணியர், ஸ்ரீ நந்திகேசுவரர்
ஸ்ரீ பலிபீடம் தோற்றம்.




ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின்
சமாதி ஆலயத்தின் வெளிப்புறம்
கர்ப்பக்கிரகத்தின் மேல் அமைந்த
விமான கோபுரத்தின் தென்புறத் தோற்றம்.



ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளால் நிறுவப்பெற்ற
ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் மடாலயத்தின் வெளியில் உள்ள,
முன்புறத்தின் மேல்பகுதியில் பதிக்கப் பெற்ற, மடாலயத்தின்
தொடக்க நாள், திறப்பு நாள் நினைவுக் குறிப்புக் கல்வெட்டின் தோற்றம்.



ஸ்ரீ. சிவசுப்பிரமணியர் மடாலயத்தின்
வெளியில் உள்ள, முன்புறத் தோற்றம்.



ஸ்ரீ. சிவ சுப்பிரமணியர் மடாலயத்தின்
மூலஸ்தானத்தில் உள்ள
ஸ்ரீ வள்ளி தேவசேனு சகித
ஸ்ரீ. சிவசுப்பிரமணிய சுவாமியின்
உலோகத் திருவுருவங்களின் தோற்றம்.



காப்பு

ஸ்ரீ கணபதி துதி.

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

நீர்மிகும் குசல மாநதி பெருகும்
நேர்மையே காம்பரக் குப்பம்
சார்மிகும் பேட்டை மடாலயத் தருகார்
சமாதியா லயமிருந் தருளும்
சீர்மிகும் வேத மொழிபெயர்ப் பாசான்
திருசிவா னந்ததே சிகரின்
பேர்மிகும் சரிதம் இயற்றிடக் கருணை
பிறங்கிடும் கணபதி காப்பு.

ஏகாம்பரக் குப்பம் பேட்டை,
ஸ்ரீ சிவ சுப்பிரமணியர் மடாலயம்

பஞ்சமூர்த்திகள் துதி.

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

சீர்மிகும் சித்தி விநாயகர் அடியைத்
திருசிவ சுப்பிர மணியர்
நேர்மிகும் அடியைப் பரசிவன் அடியை
நீடருள் அம்பிகை அடியைப்
பேர்மிகும் நலயே காம்பரக் குப்பம்
பேட்டையா லயமிருந் தருளும்
தேர்மிகும் குருவாம் திருசிவா னந்தத்
தேசிகன் அடியிணைப் பணிவாம்.

ஏகாம்பரக் குப்பம் பேட்டை
ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம்
ஸ்ரீ ஆனைமுகக் கடவுளாகிய விநாயகக் கடவுள், ஸ்ரீ குமரக் கடவுள் துதி.

(ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள் பாடியது)

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

உலகெலாம் திகழ்மாந் தர்க்கு உதவுகைத் தொழிலும் ஓங்க
அலகொடார் பாவும் நூலும் அரிந்துகை யாண்டு மேலாம்
இலகுசெங் குந்தர் வாழும் ஏகாம்பர குப்பம் பேட்டை
குலவுமா முகனை மற்றும் குமரனைத் துதித்து வாழ்வாம்.

ஸ்ரீ சிவசுப்பிரமணியர் திருப்புகழ்.

(ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள் பாடியது)

மறைமுடிகள் தேடிவிட்ட பொருளையுளம் மீதிற்கிட்ட
தமியன்வெகு பாடுபட்டுத் தவயோகில்
மனமசைவி லாதிருக்கத் தினமுமறி நூல்கள்கற்றும்
மயலதனி லேபுகுத்தி வளிபோல
நிறைநினைவு கோடியுற்று கணமதனில் பாருசுற்றி
சகமுழுதும் ஓடுதித்தைச் சிவபால
நிருதருயிர் மாளவைத்து அமரர்குழு வாழநித்தம்
நிகரின்மயில் ஏறும்வெற்றி வடிவேலா
இறையளவென் மீதுவைத்த கருணைவலி யாலடர்த்துன்
திருவடியின் பானிறுத்த அருள்வாயே
இருணிகழும் சோலைமுற்றும் எழின்மிகுநன் னீருமுற்ற
இதகுசல வாறுபெற்று இனிதாக
உறைதருசெங் குந்தர்வெற்றி யுறுதிருவே காம்பரத்து
உலவுகுப்பம் பேட்டையென்னும் திருவூரில்
உணர்வைவளர் நூல்கள்கற்ற பெரியருறை சீர்மிகுத்த
உரைபயில் மடாலயத்தின் முருகோனே.

உ
ஓம்தத்ஸத்

ஏகாம்பரக் குப்பம் பேட்டை
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
சிவானந்த யதீந்திர சுவாமிகள் மடாலயம்.

வேதமொழிபெயர்ப்பு ஆசிரியர்-காசிவாசி,
ஸ்ரீ வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள்
சரித்திரம் (சுருக்கம்).

நூல்
பிரிவு
எண்

1. [நாட்டுச் சிறப்பு]

திருவருள் மிகுந்த இறைவனது அருளாட்சி யுற்று விளங்கும், கடல் புடை சூழ்ந்த நெடுநில உலகிலே, தெய்வ ஆலயங்களும், தெய்வம் கொள்கையிற் சிறந்த சான்றோர்களும் மிகுந்து தெய்வீக அருட் செல்வம் பொருந்திச் சிறப்புற்று விளங்கும் நாடு இந்திய நாடேயாகும் என்பது உலகப் பிரசித்தமானதேயாம்.

இத்தகைய சிறப்புற்று விளங்கும் இந்திய நாட்டின், தென்பகுதியாக உள்ளது தமிழ்நாடு ஆகும். இத்தகைய தமிழ் நாட்டில் காவிரியாறு பெருகி வளஞ் செய்வதால், சோழவளநாடு என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சோழ மண்டலம் உள்ளது.

இத்தகைய சோழ மண்டலத்தில் உள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில், சைவசமய ஆசாரியர்களால் பாடல் பெற்று, தெய்வீகச் சிறப்புற்ற,

நூல் பிரிவு எண்

1. சிவக்ஷேத்திரமாகிய வேதாரண்ணியம் என்னும் திருமறைக்காடு க்ஷேத்திரம் உள்ளது.

2. [ஊர்ச்சிறப்பு]

இத்தகைய திருமறைக்காட்டுக்கு அருகில் ஸ்ரீ அகத்தியமாமுனிவர் உண்டாக்கிய முள்ளி யாறு பாய்வதால் நீர்வளம், நிலவளம் முதலிய பல வளங்களும் நிறைந்த சிறப்புப் பொருந்திய, ஆயக்காரம்புலம் என்னும் ஊர் உள்ளது.

3. [குடிகளின் சிறப்பு]

இத்தகைய ஊரில் சேரமண்டலத்தை ஆண்ட சேர மன்னனின் குலமாகிய அகமடியர் குலத்தைச் சேர்ந்த, பழங்குடிகள் ஆகிய அகமடித் தேவர்களின் குடிகள் பல உள்ளன.

4. [இவர்கட்கு அகமடியர் என்ற காரணப் பெயர் உண்டான வரலாறு வருமாறு]

சுந்தரமூர்த்தி நாயனுருடன் பரமசிவ னுடைய சந்நிதியில், ஆதியுலா அரங்கேற்று தற்குக் கைலாயத்திற்கு எழுந்தருளிய சேர அரசனுன சேரமான் பெருமாள் நாயனுர் பரம சிவனுக்கு அகமடித் தொண்டில் மிகவும் சிறப் புற்றவராதலினுல், இவர்க்கும், இவரது குலத் தார்க்கும் அகமடியர் என்னும் சிறப்புக் காரணப் பெயர் உண்டாயிற்று. ஆகவே இவர்கள் இவரது குலத்தார்கள் ஆதலால், இவர்கட்கும்

நூல்
பிரிவு
எண்

4. அகமடியர் என்னும் சிறப்புக் காரணப் பெயர் உண்டாயிற்று.

5. [அகமடித் தொண்டு என்பதின் பொருள் விளக்கம் வருமாறு]

(பதப் பிரிவு) அகம், அடித், தொண்டு. என்பதாம்.

(இதன் பொருள்) ''அகம்'' என்பதற்கு உள்ளே என்பது பொருள்; அதாவது சிவாலயத்தின் உள்ளே-என்பது பொருள். ''அடித் தொண்டு'' என்பதற்கு சிவபெருமானின் திருவடிகட்குச் செய்யும் பூசைத் தொழில்; என்பது பொருள்.

ஆகவே சிவாலயத்தின் உள்ளே சிவபெருமானின் திருவடிகட்குச் செய்யும் பூசைத் தொழில் காரணமாக உண்டான சிறப்புக் காரணப்பெயர் ''அகம் அடியர்'' என்பதாம்.

இத்தகைய ''அகம் அடியர்'' என்னும் காரணப் பெயரே, மக்கள் வழங்கும் முறைகளால், ''அகமடியர்'' என்றும், ''அகமுடையர்'' என்றும், ''அகம்படியர்'' என்றும் மருவி வழங்குவதாயின.

நூல்
பிரிவு
எண்

6. [இவர்கட்கு அகம்அடியர் என்னும் பெயருடன், தேவர்கள் என்னும் பெயரும், சேர்ந்து வழங்கு வதற்குக் காரணம் வருமாறு]

தேவர்கள் என்பதற்கு, உயர் குணத் தொழிலர்கள் என்பது பொருள். இவர்களது அகம் அடித் தொழில்கள் உயர் குணத் தொழில்கள் ஆதலால், இவர்கட்கு அத்தொழில்கள் காரண மாக வந்த, காரணப் பெயரான தேவர்கள் என்னும் பெயரும் சேர் ந்து, அகம்அடித் தேவர் கள் என்னும் பெயர்கள் பழங்காலத்திலிருந்தே வழங்குவதாயின. (இவ்வாறு முன்னைய வரலாறு களில் கூறப்பட்டுள்ளது).

7. [தாய் தந்தையர் இயல்பும் - பிறப்பும்]

இத்தகைய அகமடித் தேவர் குலத்தில் ''சாமித்தேவர்'' என்று குலமரபு விளக்கக் காரணப் பெயர் கொண்ட ஒருவர் இருந்தனர். அவர் தமது மனைமாட்சியிற் சிறந்த ''மதுரம் மாள்'' என்னும் தருமபத்தினியாருடன், இல்லறத்தை நல்லறமாக நடைபெறச் செய்து கொண்டு வந்தனர். அப்போது அவர் சிவபெரு மானுக்கு அகம்அடித் தொண்டாகிய சிவபூசை செய்யுங் காலத்தில், உலக உபகாரம் செய்யும் உத்தமபுத்திரன் எங்கட்கு உண்டாகும்படி திருவருள்புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டு வந்தனர். அவ்வாறே அவர்கட்குச்

நூல்
பிரிவு
எண்

7. சிவபெருமானின் திருவருளால் உத்தமமான சுப காலத்தில், உத்தமமான குணங்களையுடைய புத்திரனுன ஒரு தவக்குழந்தை பிறந்தது. இக் குழந்தையைப் பெற்ற காலத்தில் பலவிதமான நற்சகுணங்கள் உண்டாயின. அதையறிந்த தாய் தந்தையர் சிவபெருமானின் திருவருளை வியந்து மகிழ்ந்திருந்தனர்

8. [நாமகரணம் (பெயரிடுதல்)]

அப்போது தாய் தந்தையர், சோதிட வல்லுனரைக் கொண்டு சோதிடம் கணிக்கச் செய்தனர். அவ்வாறு சோதிடம் கணித்ததில், இக்குழந்தையானது சகல சற்குணங்களும் உடையதாய், இக்கலியுகத்திலுள்ளார்க்கு உலக உபகாரமாக அரும் பெரும் காரியங்களைச் செய்யும் என்று கணிக்கலாயினர். அவ்வாறு சோதிடம் கணித்த சோதிடர்கள், இக்குழந்தை, இக்கலியுகத்தில் உள்ளார்க்கு உலக உபகார மாக அரும்பெரும் காரியங்களைச் செய்யும் என்று சோதிட கணிதம் வருதலால், 'கலியபெருமாள்' என்னும் காரணப் பெயர் வைக்கலாம் என்று யோசனை கூறினர். அந்த யோசனையை ஏற்றுத் தாய் தந்தையர் நல்ல ஓரையில் குழந்தைக்குக் ''கலியபெருமாள்'' என்ற பெயர் இட்டுச் சிறப்புற வளர்த்துவந்தனர்.

நூல்
பிரிவு
எண்

9. [தமிழ்க் கல்வி கற்றல்]

பின்பு ஐந்து வயது வந்த காலத்தில், இச் சிறுவர் பள்ளியில் வைத்தல் இன்றியே ஒரு தமிழாசிரியரையடைந்து, அவர் கற்பித்தது ஒரு பங்கும், தானே கற்றுக்கொண்டது இருபங்கு மாகத் தமிழ்க் கல்வியை சிறப்பாகக் கற்றுக் கொண்டனர்.

10. [ஸ்ரீ சுப்பிரமணியர் உபாசனை]

அவ்வாறு தமிழ்க் கல்வி கற்கும் காலத்தில் ஸ்ரீ விநாயகக் கடவுளை முதலில் துதித்து, அதன்பின் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளைத் தனது உபாசனு தெய்வமாகக்கொண்டு, வெகு நேரம் துதி செய்து, திருவருள்புரிய வேண்டும் என்று வேண்டுதல் செய்துகொண்டு வந்தனர்.

11. [அடியார் பெரியோர் முதலானவர்களிடம் அன்பு செய்தல்]

இச்சிறுவர் இளம் பிராயத்திலேயே, தனது வீட்டுக்கு வரும் அடியார், பெரியோர் முதலான வர்களைக் கண்டால், அன்பு பாராட்டி அவர்கட்கு அநுகூலமான தொண்டு புரிதலைப் பெருங் குணமாகக் கொண்டிருந்தனர்.

12. [பற்றின்றி இருத்தல்]

இளமைப் பருவத்திலேயே, இல்லறம் துறவறம் என்னும் பாகுபாடு தெரியாதிருந்தும்,

நூல்
பிரிவு
எண்

12. உலகப்பற்றின்றி இருப்பதிலேயே விருப்ப முடையவராய் இருந்து வந்தனர்.

13. [தவயோக நெறிகளைப் பயிலுதல்]

இவ்வாறு இச்சிறுவர் இளம் பருவத்திலேயே நற்குணங்களைப் பழகிவரும்போது, தனது ஊருக்கு அடுத்த ஒரு பெரியார் மடத்தில் நடைபெற்ற ஈசுவர பஜனைக்குச் சென்றிருந்தனர். அப்போது அங்கிருந்த தவயோகசித்திகை வரப்பெற்ற, ஸ்ரீ இராமையச் சுவாமிகள் என்பவர், இச்சிறுவருடைய நற்குணங்களையும், சிறந்த கல்வி அறிவையும் அறிந்து வியந்து அன்பு கொண்டு, அன்பா கலியபெருமாளே! இவ்விடமே இருந்து தவயோக நெறிகளைப் பயில்வாயாக; என்று கூறினர். அதைக் கேட்ட கலியபெருமாள், இவ்வாறு தவயோக நெறிகளைப் பயில்வதே, நாம் கொண்ட மனிதப் பிறவியின் சிறப்பறிவுக்கு உகந்ததாகும் என்று கருதியவராய்த், தமது ஒன்பதாம் வயதுள்ள அக்காலத்தில் பிரம்மச்சாரியாகவே வீட்டை விட்டுத்துறந்து, அம்மடத்திலேயே ஸ்ரீ இராமையச் சுவாமிகளுடன் தங்கித், தவயோக நெறிகளைப் பயின்று தேர்ச்சியடைந்தனர்.

14. [சாதன சதுட்டயங்களை அடைதல்]

இவ்வாறு தவயோக நெறிகளைப் பயின்று தேர்ச்சியடைந்ததனுல், இவருக்கு, ஆன்ம

நூல் பிரிவு எண்

14. ஞான சாதனங்களான, 1. நித்திய அநித்திய வஸ்து விவேகம், 2. இகஅமுத்திர அர்த்த பல போக விராகம், 3. சம ஆதி சட்க சம்பத்தி, 4. முமுட்சுத்துவம் என்னும் நான்கு சாதனங் களும் உண்டாயின.

15. [இலக்கண இலக்கிய நூல்களைக் கற்று, வேதாந்த ஞான நூல்களைக் கற்க விரும்புதல்]

அக்காலத்தில், அங்கு கோவிலூர் மடாலயம் கருணைநிதி என வழங்கும், ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக சுவாமிகளின் சீடரும், வேதாந்த ஞான அநுபூதியுடையவரும்ஆன, காசிச் சுவாமிகள் என்னும் ஸ்ரீ அருணசல ஞானதேசிக சுவாமிகள் வந்திருந்து, இலக்கண, இலக்கிய நூல்களையும், வேதாந்த ஞான நூல்களையும் பாடபோதனை செய்ய ஆரம்பித்தனர். அப்போது கலிய பெருமாள் மேற்படி ஸ்ரீ காசிச் சுவாமிகள் என்னும் ஸ்ரீ அருணசல ஞானதேசிக சுவாமி களிடம் சென்று, சில அன்பர்களுடன் தமிழ் இலக்கண நூல்களையும், சோணசைலமாலை முதலிய இலக்கிய நூல்களையும் பயின்று தேர்ச்சி யடைந்து, அதன்பின் வேதாந்த ஞான நூல் களைக் கற்க விரும்பினர்.

16. [கோவிலூர் மடாலயம், ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகளை ஞானகுருவாக அடைதல்]

பின்னர் கலியபெருமாள் மேற்கூறிய ஸ்ரீ காசிச் சுவாமிகள் என்னும், ஸ்ரீ அருணசல

நூல்
பிரிவு
எண்

16. ஞானதேசிக சுவாமிகளின் கருத்தின்படி, அவரது அனுமதியும், ஆசியும் பெற்று, செட்டி நாடுகளுக்குள் திலகமாய் விளங்கும் கோவிலூர் என்னும் திருப்பதியை அடைந்து, அங்குள்ள, ஸ்ரீ. முத்திராமலிங்க ஞானதேசிக சுவாமிகளின் திருமடாலயத்தில், மிகுந்த தவமுடையவராயும், ஐந்தாம் குருமூர்த்தியாயும் இருந்த, ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகளைக் கண்டு, அஷ்டாங்க நமஸ்கார முறைப்படி, அவரது திருவடிகளில் பணிந்து எழுந்து அடக்கத்துடன் நின்றனர். அப்போது ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள், கலியபெருமாளது பணிவையும், அடக்கத்தையும் கண்டு மகிழ்த்து, ஆசீர்வாதம் செய்து, திருநீறு கொடுத்து, அருள் நோக்கத்துடன் இங்கிருந்து ஆன்மஞான உபதேசங்களைக் கேட்டு, ஞான மோக்ஷங்களை அடைவாயாக; என்று கூறினர்.

17. **[கலியபெருமாள், பிரம்மச்சரிய ஆசிரமியாக இருத்தலும், சிவானந்த சுவாமி என்னும் நாமம் பெறுதலும்]**

பின்னர், ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள், கலியபெருமாளைப் பிரம்மச்சரிய ஆசிரமத்திலேயே இருக்கும்படி கூறி, கலிய பெருமாள் என்னும் பெயர்க்கு உரிய கருத்துப் பொருளும், சிவானந்தம் என்னும் பெயர்க்கு உரிய கருத்துப் பொருளும், ஒற்றுமை

நூல் பிரிவு எண்

17. யுடையதேயாம் ஆயினும், சிவானந்தம் என்னும் பெயர் சிவபெருமானுடைய நினைவும் சேர்ந்து வரும் சிறப்புடையதாதலால், உனக்கு சிவானந்தம் என்னும் பெயரை வைத்திருக்கிறேன். ஆகவே இனிமேல் உனக்குக் கலியபெருமாள் என்னும் பெயருக்குப் பதிலாகச் சிவானந்தம் என்னும் பெயரே வழங்கி வரவேண்டும் என்று கூறினர்.

18. [வேதாந்த ஞான உபதேச பாடநூல்கள் கற்றுத் தேர்ச்சியடைதல்.]

அதன்பின் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள், தமது மாணவராகிய சிவானந்த சுவாமிக்கு, வேதாந்த ஞான உபதேச நூல்களின் பாடங்களைப் போதனை செய்ய விரும்பி, அங்கு நடைபெறும் பாட முறைப்படி ★ 1. நாநா சீவ வாதக் கட்டளை, 2. கீதாசாரத் தாலாட்டு, 3. சசிவன்ன போதம், 4. மகாராசா துறவு, 5. வைராக்கிய சதகம், 6. வைராக்கிய தீபம், 7. இலக்கணாவிருத்தி, 8. அஞ்ஞவதைப் பரணி, 9. விவேகசூடாமணி, 10. வேதாந்தசூடாமணி,

★ கோவிலூர் மடாலயத்தில் நடைபெறும் பதினறு வேதாந்த ஞான நூல்களின் உபதேச பாட வரிசை முறையை, இங்கு கூறப்பெற்றபடியே ஸ்ரீசிவானந்த யதீந்திர சுவாமிகள் தாம் இயற்றிய ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகளின் சரித்திர வசன நூலின் முதல் பதிப்பின் 37ஆம் பக்கத்தில் கூறியுள்ளனர்.

நூல்
பிரிவு
எண்

18. 11. கைவல்லிய நவநீதம், 12. பஞ்சதசி; 13. ஈசுவரகீதை, 14. பகவற்கீதை, 15. பிரம்ம கீதை, 16, ஞானவாசிட்டம். ஆகிய பதினாறு நூல்களையும் முறையாக இனிய கருணையுடன் உபதேச பாடமாகப் போதித்தருளினர். சிவானந்த சுவாமிகள் நமது குரு உபதேசித்த இவ்வாறான பதினாறு நூல்களையும், சிரத்தை யுடன், முறையாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, சதா ஆத்ம சிந்தனையுடன்இருந்தனர்.

19. [வடமொழியாகிய சமஸ்கிருதம் கற்க விரும்புதலும், ஸ்ரீ காசிப்பதியை அடைதலும்.]

பின்பு வடமொழியாகிய சமஸ்கிருத மொழியிலும், வேதாந்தம் முதலிய நூல்களையும் கற்க வேண்டும் என்னும் விருப்பம் உண்டானவராய்த் தமது ஞானாசாரியராகிய ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகளிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்து, அவரது அன்புடன்கூடிய ஆணையும் ஆசியும் பெற்றுக்கொண்டு, ஸ்ரீ காசிப்பதியை அடைந்து, ஸ்ரீ கங்காஸ்நானம் செய்து, அங்கு அருள்புரிந்து விளங்கும் ஸ்ரீ விசுவநாதப் பெருமானையும், ஸ்ரீ விசாலாட்சியம்மையாரையும், மற்றுமுள்ள மகத்துவமுடைய தெய்வங்களையும் விதிப்படி வணங்கித் திருவருள் புரிய வேண்டிக் கொண்டனர்.

நூல்
பிரிவு
எண்

20 [காசிப்பதியில் ஸ்ரீ ஞாநானந்தபுரி மண்டலேசுவர சுவாமிகளை, இரண்டாம் குருவாக அடைதலும், அவரிடம் காஷாய சந்நியாசம் பெறுதலும், தசநாம சந்நியாசிகளின் நாமங்களில் புரி என்னும் நாமத்தை (பெயரை) ப் பெறுதலும், இந்தி மொழியையும், சமஸ்கிருத மொழியையும் சிறப்புறக் கற்றுத் தேர்ந்து, சமஸ்கிருதத்தில் வியாகரணம் (இலக்கணம்) முதலிய நூல்களையும், வேதாந்த ஞான நூல் முதலியவைகளையும் கற்றுத் தேர்தல்]

அதன்பின் காசிப்பதியில் வேதாந்த ஞான குருவாக விளங்கிக்கொண்டிருந்த, ஸ்ரீ ஞாநானந்தபுரி மண்டலேசுவர சுவாமிகளிடம் சென்று, விதிப்படி வணங்கி அவரை இரண்டாம் குருவாகக் கொண்டு, அவர் வேத விதிப்படியான பரமஹம்ச சந்நியாசமாகிய காஷாய சந்நியாசம் கொடுக்கப்பெற்று, மற்றும் ஸ்ரீ. ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகளின் சிஷ்ய பரம்பரையினர்களாகிய, பரமஹம்ஸ சந்நியாசிகளின் நாமங்களாகிய (பெயர்களாகிய) 1. தீர்த்தம், 2. ஆஸ்ரமம், 3. வநம், 4. ஆரண்யம், 5. கிரி, 6. பர்வதம், 7. சாகரம், 8. சரஸ்வதி, 9. பாரதி, 10. புரி. என்னும் தச நாமங்களில் (பத்துப் பெயர்களில்) ஒன்றாகிய ''புரி'' என்னும் திருநாமம் (திருப்பெயர்) கொடுக்கப் பெற்று ''சிவானந்த புரி'' என்னும் திருநாமமுடன் (திருப்பெயருடன்), இந்தி மொழியையும்,

நூல்
பிரிவு
எண்

20. சமஸ்கிருத மொழியையும் சில நாள்களிலேயே சிறப்புறக் கற்றுத் தேர்ந்து, சமஸ்கிருத மொழியில், வியாகரணம், தர்க்கம் முதவிய கருவி நூல்களையும், பூர்வ மீமாஞ்சை முதலிய உபாங்க நூல்களையும், உத்தர மீமாஞ்சை முதலிய வேதாந்த நூல்களையும், அத்வைத சித்தி, கண்டன கண்ட காத்தியம் முதலிய கண்டன நூல்களையும் சிறப்புறக் கற்றுத் தேர்ந்து, அந்நூல்களை அங்குள்ளவர்கட்கும் போதித்துக் கொண்டு காசிமா நகரில் எழுவருட காலம் வாழ்ந்து வந்தனர்.

21. [தமிழ்நாட்டை அடைந்து, திருக்களர் க்ஷேத்திரம் சென்று, தமது குருநாதராகிய ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிகளின் சமாதியாலயத்திற்கு வந்து, தமது குருநாதரை வணங்கித் துதித்து இருத்தல்]

பின்பு தமிழ் நாட்டிற்குச் செல்லவேண்டும் என்னும் விருப்பம் உண்டானவராய், அங்கிருந்து புறப்பட்டுத் தமிழ்நாட்டை அடைந்து, தமது ஞானசிரியராகிய ஸ்ரீ.வீரசேகர ஞானதேசிக சுவாமிகள், முன்னமே பல அன்பர்களின் வேண்டுகோள்கட்கு இணங்கிக் கோவிலூர் மடாலயத்திலிருந்து புறப்பட்டுத் திருக்களர் என்னும் க்ஷேத்திரத்திற்குச் சென்று, அங்கு ஸ்ரீ. திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடல் பெற்ற சிவக்ஷேத்திரமாகிய, ஸ்ரீ. அமிர்த வல்லி அம்மையாருடனை ஸ்ரீ. பாரிஜாத

நூல்
பிரிவு
எண்

21. வனேசுவர சுவாமி ஆலயத்தின் சீரமைப்புத் திருப்பணிசெய்து முடித்துச் சிறப்புறக் குடமுழுக் காட்டியபின், அங்கேயே விதேக முத்தியை யடைந்து சமாதி ஆலயங்கொண்டு, திருக்களர் ஆண்டவர் என்னும் சிறப்புப் பெயருடன் சிவ லிங்க வடிவில் திருவருள் புரிந்து கொண்டு இருப்பதைக் கேள்வியுற்றுத், திருக்களர் க்ஷேத் திரம் சென்று, அங்கு ஆலயத்தில் சிவலிங்க வடிவில் அருளாட்சி புரிந்துகொண்டிருக்கும் திருக்களர் ஆண்டவராகிய தமது ஞானசிரி யரைத் தரிசனம் செய்து, விதிப்படி வணக்கங்கள் செலுத்தித் துதித்துக் கொண்டு இருந்தனர்.

22. [திருக்களர் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் புராணம் முதலிய நூல்கள் இயற்றி அரங்கேற்று தலும், யதீந்திரர் என்னும் நாமம் (பெயர்) பெறுதலும்]

பின்னர், மாணவன் ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய கைமாறு வேறு ஒன்றும் இல்லை யாயினும், ஆசிரியரின் பெருமையை நூல்களின் வாயிலாக உலகறியச் செய்வதால், அதை அறிந்த உலகம் உய்தி பெறும். ஆதலால் இவ்வாறு செய்வதே ஆசிரியருக்கும், உலக உபகாரத்திற்கும் செய்யும் பெரும் பணியாகும்; என்னும் உலக உபகாரச் சிந்தனையுற்றுத், திருக்களர் ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமி களாகிய, தமது குருமூர்த்தியின் சமாதியா

நூல்
பிரிவு
எண்

22. லயத்தின் சந்நிதியில் விரதத்துடன் இருந்து, நூல்கள் இயற்றினர்.

அவை வருமாறு.

1. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் புராணம்; 1430 கவிகள்-கொண்ட பெரிய வரலாற்றுச் சிறப்புடைய நூல்.

2. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் புராண வசனம்;
(ஸ்ரீ. திருக்களர் ஆண்டவர் சரித்திர வசனம்).

3. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் புராணசாரப் பஞ்ச ரத்தினம்.

4. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் தோத்திரப் பத்து.

5. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் பிள்ளைத் தமிழ்; கவிகள். 100.

6. கோவிலூர் நால்வர் நான்மணி மாலை; கவிகள். 40.

ஆகிய ஆறு நூல்களையும் இயற்றி, ஸ்ரீ திருக்களர் ஆண்டவர் சந்நிதியில் ஆண்டு குருபூஜை விழா நாளில், சிறந்த வேதாந்த ஞானிகளாகிய, சாதுக்கள் கூடிய பெருஞ் சபையில், சிறப்புற அரங்கேற்றம் செய்தனர்.

நூல்
பிரிவு
எண்

22. அப்போது அச்சனபயோர்கள், ஸ்ரீ சிவானந்தபுரி சுவாமிகளைச் சிறப்புறப் பாராட்டுதல் செய்து, அவர்களுடைய அசேஷ சாஸ்திர பாண்டித்தியத்தையும் (குறைவின்றிய நிறைந்த சகல சாஸ்திரப் புலமையையும்), ஆத்மநிஷ்டானுபவ விளக்கத்தையும், பரமஹம்ச சந்நியாசச் சிறப்பு ஒழுக்கத்தையும் அறிந்து, யதீந்திரர் (யதி இந்திரர்-அதாவது சந்நியாசித் தலைவர்) என்னும் புகழ்நாமம் (புகழ்ப் பெயர்) கொடுத்து ''சிவானந்தபுரி யதீந்திரர்'' என்னும் பெயர் வழங்கச் செய்தனர். பிற்காலத்தில், அவருடைய பெயர் வழங்குதல் புரி என்பது குறைந்து சிவானந்த யதீந்திரர் என வழங்குதலானது.

23. [உலக உபகாரம் செய்ய விரும்பித் திருத்தணி சென்றடைந்து, ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளை வணங்குதலும், பின் நிகழ்ச்சியும்.]

அதன்பின் உலக உபகாரம் செய்ய விரும்பியவராய், பிரபவ வருஷம், சித்திரை மாதம் 3ஆம் தேதி (ஆங்கிலம் 1927ஆம் வருஷம், ஏப்ரல் மாதம், 15 ஆம் தேதி) வெள்ளிக்கிழமை புறப்பட்டுத் திருத்தணி சென்று, அங்கு மலைமேல் ஆலயங்கொண்டு அருளாட்சிபுரியும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் சந்நிதியில் விதிப்படி வணங்கி, உலகமெல்லாம் சகல சுபங்களும்பெற்று, ஆனந்தமாக வாழ அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து,

நூல்
பிரிவு
எண்

23. திருவருள் பெற்றுக்கொண்டு, அங்கு ஓர் பகுதியில் ஆசிரமம் அமைக்கச்செய்து, அதில் தங்கியிருந்து அங்கு தம்மிடம் வந்து வேண்டிக் கொண்ட பக்தர்கட்கு ஆசிகள் வழங்கிக் கொண்டும் சமஸ்கிருதத்திலும், தமிழிலும் வேதாந்த சாஸ்திரங்களின் போதனைகள் செய்து கொண்டும் இருந்து வந்தனர்.

அதன்பின் சில அன்பர்களின் வேண்டு கோளுக்கு இணங்கி, மலையின் அடிவார ஊரின் ஓர் பகுதியில் ஆலயங்கொண்டு அருளாட்சி புரியும், ஸ்ரீ ஆறுமுக சுப்பிரமணியக் கடவுளின் ஆலயத்திற்குச் சென்று விதிப்படி வணக்கம் செய்து, திருவருள் பெற்று, அங்கு ஓர் பகுதியில் இருந்த ஆசிரமத்தில் தங்கியிருந்து, அங்கு தம்மிடம் வந்து வேண்டிக்கொண்ட பக்தர்கட்கு ஆசிகள் வழங்கிக்கொண்டும், சமஸ்கிருதத் திலும், தமிழிலும் வேதாந்த சாஸ்திரங்களின் போதனைகள் செய்துகொண்டும் இருந்து வந்தனர்.

24 [ஏகாம்பரக்குப்பம், குமார வெங்கிட பெருமாள் ராஜாப்பேட்டைக்கு வருதலும், தம்மிடம் வந்து வேண்டுகிறவர்கட்கு ஆசிகள் வழங்குதலும், சமஸ் கிருதத்திலும், தமிழிலும் வேதாந்த சாஸ்திர போதனைகள் செய்தலும்]

அதன்பின், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள நகரிக்கு அடுத்த, ஏகாம்பரக்குப்பம் பேட்டை யிலிருந்த, ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளின் பக்தர்

நூல்
பிரிவு
எண்

24. களாகிய செங்குந்த முதலியார்களில், தி. மு. அண்ணுமலை முதலியார் முதலிய பலரும், ஸ்ரீ சிவானந்தயதீந்திர சுவாமிகளின் பெருமைகளைக் கேள்விப்பட்டு, திருத்தணிக்கு வந்து, ஸ்ரீ சுவாமிகளைக்கண்டு அடிபணிந்து, ஏகாம்பரக் குப்பம்பேட்டைக்கு வந்து ஆசிகள் வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

அவர்களது வேண்டுதலுக்கு இணங்கி, பிரபவ வருஷம், கார்த்திகை மாதம், 13 ஆம் தேதி (ஆங்கிலம் 1927ஆம் வருஷம், நவம்பர் மாதம் 28ஆம் தேதி) திங்கட்கிழமை ஸ்ரீ சுவாமிகள் திருத்தணியில் இருந்து, தி.மு. அண்ணுமலை முதலியார் முதலிய பல அன்பர்களுடன் புறப்பட்டு ஏகாம்பரக்குப்பம் பேட்டைக்கு வந்து சேர்ந்தனர்.

அப்போது அங்கு சந்நியாசியாகிய ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள் முன்னமே வந்திருந்து ஒரு சிறிய ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தனர். அந்த ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகளும், பக்தர்களாகிய, பு.சா. குப்புசாமி முதலியார், பு. சா. வெங்கடேச முதலியார் முதலிய எல்லா முதலியார்களும், மற்ற பக்தர்களும் சேர்ந்து, ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளை எதிர்கொண்டு பல உபசாரங்களுடன் அழைத்துவந்து, அங்கு முன்னமே அமைத்திருந்த ஒரு ஆசிரமத்தில் தங்கும்படி செய்து,

நூல்
பிரிவு
எண்

24. பணிந்து வணங்குதல் செய்து, ஆசிகள் பெற்றனர்.

25. [ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம் நிறுவவிரும்பி, பக்தர்கட்கு அறிவித்து மடாலயத்தின் தொடக்க மாகிய அடிக்கல் நாட்டுவிழாச் செய்தலும், வேதாந்த சாஸ்திர பாடபோதனைகள் செய்து கொண்டு இருத்தலும்.]

அதன்பின் ஸ்ரீ சுவாமிகள் அங்கு தாம் வழிபாடு செய்யும் தமது உபாசனாமூர்த்தியாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுளின் திருவுருவங்களை வைத்துப் பூசனைபுரிவதற்கும், பக்தர்களுக்குச் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் வேதாந்த நூல் களைப் பாடபோதனைகள் செய்வதற்கும், தமது உபாசனாமூர்த்தியாகிய ஸ்ரீ சிவசுப்பிரமணியர் பெயரால், ஓர்மடாலயம் அமைக்க வேண்டும் என்று விரும்பியவராய்த் தமது பக்தர்கள் எல்லோருக்கும் தமது விருப்பத்தைத் தெரிவித் துத் தமது முயற்சியினாலும், தமது பக்தர்களின் முயற்சியினாலும், பிரபவ வருஷம், தை மாதம், 23ஆம் தேதி (ஆங்கிலம் 1928ஆம் வருஷம், பிப்ரவரி மாதம், 5ஆம் தேதி) ஞாயிற்றுக்கிழமை, பூர்வபக்ஷம், பௌர்ணமிதிதி, பூச நக்ஷத்திரம் கூடிய சுபநாளில், சூரிய உதயாதி நாழிகை $7\frac{1}{2}$ (மணி 9) அளவில் ''சிவசுப்ரமண்ய மடாலயம்'' என்ற பெயரில், மடாலயத்தின் தொடக்கமாகிய அடிக்கல் நாட்டுதல் விழாச் செய்தனர்.

நூல்
பிரிவு
எண்

25. அதன்பின் ஸ்ரீ சுவாமிகள் தமது பக்தர்களிடம் மடாலயம் கட்ட வேண்டிய விபரங்களைத் தெரிவித்து, அவர்களைக் கட்டும்படி ஏவுதல் செய்து கொண்டும், தம்மிடம் வந்து வேண்டிக்கொண்ட பக்தர்கட்கு ஆசிகள் வழங்கிக்கொண்டும், சமஸ்கிருதத்திலும், தமிழிலும் வேதாந்த சாஸ்திரங்களின் பாட போதனைகள் செய்துகொண்டும் இருந்து வந்தனர்.

26. [வெளியூர் சென்று, தெய்வீக காரியங்கள் செய்து கொண்டிருத்தல்.]

பின்னர் வெளியூர் பக்தர்களின் வேண்டுகோட்கு இணங்கிச் சென்னை முதலிய வெளியூர்கட்குச் சென்று, பக்தர்கட்கு ஆசிகள் வழங்குதலும், சமஸ்கிருதத்திலும், தமிழிலும், வேதாந்த நூல்கள் பாடபோதனைகள் செய்தலும், சமஸ்கிருத உபநிடதங்களைத் தமிழில் மொழிபெயர்ப்புக்கள் செய்தலும், ஆலயங்களின் வரலாற்றுப் புராணங்கள் முதலியவைகளை இயற்றுதலும், மகான்களின் வரலாற்றுப் புராணங்கள் முதலியவைகளை இயற்றுதலும், தெய்வீக சபைகட்குத் தலைமைதாங்கி உபந்நியாசங்கள் செய்தலும், சமஸ்கிருத வேதங்களைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தலும் ஆகிய தெய்வீகப் பணிகளைச் செய்துகொண்டு சிலகாலம் இருந்தனர். அவற்றுள் வேத மொழிபெயர்ப்பு நிகழ்ச்சி வருமாறு.

நூல் பிரிவு எண்

26. ஒருபோது திருவருட் செலுத்த சென்னை யிலுள்ள ஆனந்தாசிரமம் என்னும் மடாலயத் தைச் சுவாமிகள் அடைந்தனர். அப்போது சென்னையில் திரு. த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களால் வடமொழிப் பாடசாலையொன்று நிறுவப்பட்டு இனிது நடந்தேறி வந்தது. அந்தப் பாடசாலைக்கு முன்னிலையாக இருந்த, திரு. முத்தானந்தர் என்னும் பெரியார், திரு. த. ப. இராமசாமிப் பிள்ளையவர்களை ஸ்ரீ சுவாமி அவர்களோடு நேரில் சந்திக்கும்படி செய்தார்கள். பிள்ளையவர்கள் இச்சந்திப்பைத் தம் தவப்பயனாகக் கருதிச் சுவாமி அவர்களை அன்போடும் பணிவோடும் போற்றி வந்தனர். ஒருநாள் பிள்ளையவர்கள் மகான்கள் சூழ வீற் றிருந்த சுவாமி அவர்களின் திருப்பாதங்களைப் பணிந்து, "சுவாமின்! அருள்கூர்ந்து தமிழ் மக்கள் திருமறையறியாதார் என்னுங் குறை நீங்குமாறு தேவரீர் வடமொழியிலுள்ள தெய் வத்திருமறைகளைத் தமிழில் மொழிபெயர்த் தருளல் வேண்டும்" என்று வணங்கிக் கேட்டுக் கொண்டார். சுவாமி அவர்களும் முருகப் பெருமான் திருவருள் அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளத் தூண்டியதால் மகிழ்ந்து அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள்.

பின்னர், வேதமொழிபெயர்ப்புத் திருப்பணி தொடங்கியது. பிள்ளையவர்கள் பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவிட்டு வடமொழி

நூல் பிரிவு எண்

26. வேதங்களையும், வேதாங்கங்களையும் மற்றும் நிருக்தம், நிகண்டு, முதலியவைகளையும் வாங்கி வைத்தனர். சுவாமி அவர்கள் மிகு உற்சாகத்தோடு இரண்டு மூன்று வருடங்களுக்குள்ளேயே சாமவேத முன்பகுதியாகிய சம்ஹிதா பாகம் முழுவதையும் தமிழில் இனிய நடையில் பதவுரை, கருத்துரை, குறிப்புரைகளுடன் மொழிபெயர்த்து விட்டனர். பிள்ளையவர்களும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு, நாகரம், கிரந்தம், தமிழ், என்னும் மூன்று வரி வடிவங்களில் இரண்டு வால்யூம்களாக, அச்சிட்டு முடித்து ஆயிரங்காப்பிகள் பைண்டு செய்து கைம்மாறு கருதாது ஆசிரியர்கட்கும், தமிழ் மக்களுக்கும் நன்கொடையாக அளித்தனர். மொழிபெயர்ப்பைப் படித்த அனைவரும் வியந்து போற்றி மகிழ்ந்தனர்.

அடுத்துப் பல்சிறப்புவாய்ந்த கிருஷ்ணயசுர் வேதம் முன்பகுதியாகிய சம்ஹிதா பாகம் முழுவதும், சுவாமி அவர்களின் திருக்கரங்களால் தமிழாக்கப்பட்டுப் பிள்ளையவர்களால் பத்து வால்யூம்களாக அச்சேறியது. ஸ்ரீ சுவாமியவர்களால், இயற்றப்பெற்ற நூல்களின் விபரங்களும் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பெற்ற வேதங்களின் விபரங்களும், வேறு பல மொழிபெயர்ப்பு நூல்களின் விபரங்களும், இந்நூலின் பிற்பகுதியில் உள்ள 43-44ஆம் பிரிவுகளில் சேர்க்கப் பெற்றுள்ளன.

நூல்
பிரிவு
எண்

27. [ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள் விதேகமுக்தி அடைதல்.]

பின்னர் ஏகாம்பரக் குப்பம் பேட்டை ஆசிரமத்தில் தங்கி இருந்த, ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள் பிரஜோத்பத்தி வருஷம், பங்குனி மாதம், 10ஆம் தேதி (ஆங்கிலம்–1932ஆம் வருஷம், மார்ச்சு மாதம், 22ஆம் தேதி) செவ்வாய்க் கிழமை, பூர்வபக்ஷம், பௌர்ணமி திதி, உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் விதேகமுக்தி அடைந்தார்கள். அப்போது அங்கிருந்த சில சாதுக்களும் அன்பர்களாகிய தி. மு. அண்ணமலை முதலியார், பு. சா. குப்புசாமி முதலியார், பு.சா. வெங்கடேச முதலியார் முதலிய எல்லா முதலியார்களும் இருந்து, ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகளின் தெய்வீகத் திருமேனிக்கு, விதிமுறைப்படி அபிஷேக, அலங்கார, ஆராதனபூஜைகள் செய்து, ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயத்தின் அருகில் உள்ள பூமியில், குகை அமைத்து, விதிமுறைப்படி சகலவிதமான உபசார பூசைகளுடன் சமாதி வைத்து, அதன்மேல் பீடம் அமைத்து, அதன் மேல் எடுத்து வைக்கக்கூடிய, சிலா சிவலிங்கம், நந்தி, பலிபீடங்கள் வைத்து, விதிமுறைப்படி அன்றை பூசையும், மூன்றும் நாள் பூசையும், பத்தாம் நாள் மோக்ஷதீப விசேட பூசைகளும் சிறப்பாகச் செய்தனர். அப்போதிருந்தே ஆண்டு குருபூசைகளும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

நூல்
பிரிவு
எண்

28. [ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் ஏகாம்பரக் குப்பம் பேட்டை ஆசிரமத்திற்கு வந்து தங்குதலும், ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் சீடராதலும், அவருக்குப் பாட போதனைகள் செய்தலும்.]

பின்னர் ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள் ஏகாம்பரக்குப்பம் பேட்டை ஆசிரமத்திற்கு வந்து தங்கியிருந்தனர். அப்போது ஏகாம்பரக்குப்பத் திலிருந்த செங்குந்த முதலியார்களில், பிரம்மச் சாரியாயிருந்த, இராமலிங்கமுதலியார் என்பவர், உலக வாழ்க்கையில் விரக்தி உண்டானவராய், இறைவனின் திருவருள் ஞான மோக்ஷத்தை அடைவதே, மனிதப் பிறப்பின் சிறப்பறிவுக்கு ஏற்றதாகும் என்று தீர்மானித்து, ஆங்கீரச வருஷம், சித்திரை மாதம், 6ஆம் தேதி (ஆங்கிலம் - 1932ஆம் வருஷம், ஏப்ரல் மாதம், 18ஆம் தேதி) திங்கட்கிழமை, வீட்டை விட்டுத் துறந்து, ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் முன்னிலைக்குவந்து அடிபணிந்து வணக்கங்கள் செய்து, தன்னைச் சீடனாக ஏற்றுக்கொண்டு, இறைவனின் திருவருள் ஞான உபதேசங்கள் செய்து, மோக்ஷத்தையடையும்படி செய்ய வேண்டும்; என்று வேண்டிக் கொண்டனர். ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள் அவருக்கு ஆசீர்வாதம் செய்து, அவரைத் தமது சீடராகக் கொண்டு, சிலகாலத்திற்குப்பின், பரமஹம்ச காஷாய சந்நியாசம் கொடுத்து, ''இராமேசு

நூல் பிரிவு எண்

28. வரானந்த கிரி சுவாமி'' என்ற தீக்ஷா நாமம் (சந்நியாச காரணப் பெயர்) வைத்து, ஸ்ரீ சிவ சுப்பிரமணியக் கடவுளின் உபாசனு முறைகளைப் போதனை செய்து, அதன்பின்னர் கோவிலூர் மடாலய குருபரம்பரையில் பாட போதனை செய்யும் நூல்களாகிய இந்த நூல் பிரிவு எண். 18ல் கூறப்பெற்ற, நாநா சீவ வாதக் கட்டளை முதல் ஞானவாசிட்டம் வரையிலான 16. நூல்களையும் முறையாக இனிய கருணையுடன் உபதேசபாடமாகப் போதித்து அருளினர். அப்போது (இந்நூல் பிரிவு எண் 18ல் கூறப்பெற்ற 16 நூல்களின் வரிசையில் 11 ஆம் நூலாகிய) கைவல்லிய நவநீதம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரைநூலில், ஆன்ம ஞான அநுபூதிக்கு உரிய, சகல வேதாந்த நூல்களின் சாரமான உபதேச அர்த்தங்கள் வரிசைக்கிரமமாகக்கூறப்பட்டு உள்ளபடியால், அவ்வர்த்தங்களை ஞாபகத்தில் கொண்டு, அதன்படி அப்பியாசம் செய்து, திட ஆன்மஞான அநுபூதியடைந்து, சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தியாகிய மோக்ஷத்தை அடையவேண்டும் என்று வற்புறுத்திக்கூறி அருளினர். ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் இவ்வாறுன பதினறு நூல்களின் பாடபோதனைகளையும், மற்ற உபதேசங்களையும் சிரத்தையுடன் முறையாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து இருந்தனர்.

நூல்
பிரிவு
எண்

29. [ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம் திறப்புவிழாச் செய்தல்.]

பின்னர் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயம் திருப்பணி நிறைவேறிவிட்டதனுல், திறப்பு விழாச் செய்ய விரும்பியவராய்த் திறப்பு விழாச் செய்ய இருக்கும் விபரத்தைப் பக்தர்கள் எல்லோருக்கும் தெரிவித்து, வரவழைத்து வைத்துக்கொண்டு, திறப்பு விழாச் செய்வதற்கு உரிய விதிமுறைப்படியான சகலவித உபசார பூசைகளையும் சிறப்புறச் செய்து, ஈசுவர வருஷம், வைகாசி மாதம், 14ஆம் தேதி (ஆங்கிலம் 1937ஆம் வருஷம், மே மாதம், 27ஆம் தேதி) வியாழக்கிழமை, அபரபக்ஷம், துவிதியை திதி, மூல நக்ஷத்திரம், கூடிய சுபதினத்தில் சிறப்புடன் மடாலயத்தின் திறப்புவிழாச் செய்தனர்.

இவ்வாறு ஸ்ரீசிவானந்த யதீந்திர சுவாமிகள், தாம் ''சிவசுப்ரமண்ய மடாலயம்'' தொடக்க விழாவும், திறப்பு விழாவும் செய்து, மடாலயத்தை நிறுவியதன் நினைவுக்கான விபரம் குறித்த கல்வெட்டை, மடாலயத்தின் முன்புறத்தின் மேல்பகுதியில் பதிக்கச்செய்தனர்.

இவ்வாறு திறப்பு விழாச் செய்யப்பெற்ற ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயத்தின் மூலஸ்தானத்தில் உள்ள, ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளால் பூசனைபுரியப்பெற்ற, ஸ்ரீ வள்ளி

நூல்
பிரிவு
எண்

29. தேவசேனுசகித ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் உலோகத் திருவுருவங்களின் தோற்றப் படமும், இம்மடாலயத்தின் வெளியிலுள்ள முன்புறத் தோற்றப் படமும், இம்மடாலயத்தின் வெளியிலுள்ள முன்புறத்தின் மேல் பகுதியில் பதிக்கப் பெற்ற மடாலயத்தின் தொடக்க நாள், திறப்பு நாள், நினைவுக்குறிப்புக் கல்வெட்டின் தோற்றப் படமும் இந்நூலின் முன் பகுதியில் சேர்க்கப் பெற்றுள்ளன.

30. [ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயத்தில் வைக்கப்பெற்றுள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளின் திருவுருவங்கட்குப் பூசனைபுரிதலும், துதிநூல் இயற்றுதலும்.]

பின்னர், ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுளின் திருவுருவங்கட்குச் சிறப்பாகப் பூசனைபுரிந்து கொண்டிருந்தனர். பின்னர், ஏகாம்பரக்குப்பம் பேட்டை மடாலயம் "ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பத்து." என்ற பத்துப் பாடல் கொண்ட துதிநூல் ஒன்று பாடினர்.

31. [ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் பரிபூரணம் அடைதலாகிய விதேக முக்தி அடைதல்.[

இவ்வாறு "உலகுபகாரம் ஞானிகள் விவகாரம்" என்று, கைவல்லிய நவநீத நூல் கூறுகின்றபடி, உலக உபகாரமாகிய தெய்வீக

நூல்
பிரிவு
எண்

31. காரியங்கள் செய்துகொண்டுஇருந்து, ஏகாம்பரக் குப்பம் பேட்டை மடாலயத்தில் தங்கியிருந்த காலத்தில், ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் தாம் பரிபூரணம் அடைதலாகிய விதேக முக்தியடையும் நாளைச் சிஷ்யர்கட்கும் பக்தர்கட்கும் அறிவித்தனர். அந்நாளில் சிஷ்யராகிய ஸ்ரீ இராமேசுவரானந்த சுவாமிகளும், அங்குள்ள முதலியார்கள் முதலான எல்லாப் பக்தர்களும்கூடி, ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சுற்றிலும் இருந்து, ஸ்ரீ சிவ நாமாவலிப் பஜனை செய்துகொண்டு இருக்கும் போது, முன்னமே அற்புதானந்த சீவன் முக்தராயிருந்த ஸ்ரீ சுவாமிகள் பத்மாசனத்தில் அமர்ந்தபடியே, அநாயாசமாக, கலியுக வருஷம், 5045-க்குச் சரியான, தமிழ் வருஷம் தாரண வருஷம், ஐப்பசி மாதம், 15ஆம் தேதி (ஆங்கில வருஷம், 1944ஆம் வருஷம், அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி) செவ்வாய்க்கிழமை, பூர்வபக்ஷம், பௌர்ணமி திதி, பரணி நக்ஷத்திரம் கூடிய சுபநாளில், சூரிய உதயாதி 30 நாழிகை (மாலை 6 மணி) அளவில், ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுளின் அதிஷ்டான சொரூபமான, அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பிரஹ்ம சொரூபத்தில் ஐக்கியம் அடைதலாகிய, விதேகமுக்தி அடைந்தார்கள்.

அப்போது அங்கிருந்த அனைவரும், ஸ்ரீ சுவாமிகளின் பிரிவு ஆற்ருது, சிறிது கவலையடைந்து இருந்தனர்.

நூல்
பிரிவு
எண்

31. ஸ்ரீ. வீர. சிவானந்தயதீந்திர சுவாமிகள்
விதேகமுக்தி நாட்கவி.

பதினன்குசீர் ஆசிரிய விருத்தம்.

சீர்மிகும் கலியை யாயிரத் தோடு
சேருநாற் பத்திஞே டைந்தில்
திகழுதா ரணவாண் டைப்பசி மாதம்
தேதியார் பதினைந்தோ டமையும்

நேர்மிகும் கிழமை மங்கள வாரம்
நிருமலப் பௌர்ணமி திதியும்
நிகழ்ந்திடும் பரணி யுடுவுறு நாளில்
நிலைமிகுந் திருக்களர்த் தலமார்

பேர்மிகும் வீர தேசிக ரருளைப்
பெற்றுல குக்கருள் புரிந்தோன்
பிறங்கிடும் தெய்வ வடமொழி வேதம்
பெருமைசங் கரவிஜ யாதி

தேர்மிகும் தமிழில் மொழிபெயர்த் தளித்தோன்
திகழுமே காம்பரக் குப்பம்
சேர்மிகும் பேட்டை சிவானந்த ஞான
தேசிகன் முக்தியுற் றனனே.

32. [சமாதி அமைப்பும், பூசைகள் புரிதலும்]

பின்னர் ஸ்ரீசுவாமிகளின் சீடரான ஸ்ரீ இரா மேசுவரானந்தகிரிசுவாமிகள் ஸ்ரீ சுவாமிகள் விதேக முத்தியடைந்த செய்தியை, அவசரத்

நூல் பிரிவு எண்

32. தந்திகள்மூலம், கோவிலூர் மடாலயம், திருக் களர் மடாலயம் முதலிய பல மடாலயங்களின் அதிபதிகளாகிய குருமஹாசன்னிதானங்கட்கும், உள்ளூர், வெளியூர்களில் உள்ள பலசாதுமகாத் மாக்கட்கும், பக்தர்கட்கும் அறிவித்தனர். இத்தகைய அறிவிப்பை அறிந்த பல மடாலயங் களின் குருமகா சன்னிதானங்களும், உள்ளூர் வெளியூர்களிலிருந்த பல சாது மகாத்மாக்களும், பக்தர்களும் சென்னையிலிருந்த ஸ்ரீ சுவாமிகளின் முக்கியபக்தர்களான திருவொற்றியூரீசர் அடி மையும், அறக்கொடை வள்ளலும்ஆன, த. ப. இராமசாமிப்பிள்ளை முதலிய பலரும் அவசரமாக வந்து சேர்ந்து, ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகளுடனிருந்து, ஸ்ரீ சுவாமிகளின் தெய் வீகத் திருமேனியை உயர்ந்த பீடத்தில் வைத்து, எல்லாவிதமான அபிஷேக திரவியங்களினுலும் அபிஷேகங்கள் செய்து, பின்னர் உயர்ந்த புஷ்ப மாலைகளால் அலங்காரம் செய்து, சகலவிதமான உபசாரங்களுடனுன பூசைகள் சிறப்புறச் செய்து, மடாலயத்தின் மேற்குப்புறத்தில் உள்ள பூமியில், ஸ்ரீ திருமூலர் திருமந்திரம்கூறும் சமாதிக்கிரியை விதியின்படியாக, முன்னமே அமைத்திருந்த குகையில், திருமூலர் திருமந்திர விதியின்படி, சகல விதமான உபசார பூசைகளுடன் சமாதி வைத்து, அதன் மேல் சிறந்த பீடம் அமைத்து, அதன்மேல் சிலையினுலானசிவலிங்கம் அமைத்து, சகலஉபசாரங்களுடன் சிறப்புறப் பூசைகள் புரிந்தனர்.

நூல்
பிரிவு
எண்

33. [ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் இரண்டாம் மடாதிபதியாக இருந்து, ஸ்ரீ.வீர.சிவானந்தயதீந்திர சுவாமிகளின் சமாதி சிவலிங்கத்திற்கு, நித்தியப்படி பூசைகள் செய்தலுடன், மூன்றும் நாள் விசேட பூசைகளும், பத்தாம்நாள் மோக்ஷதீபவிழா விசேட பூசைகளும் செய்தல்.]

பின்னர்ஸ்ரீசிவானந்தயதீந்திரசுவாமிகளின் திருவருளின்படி தாரணவருஷம், ஐப்பசிமாதம், 15ம்தேதி,(ஆங்கிலம்1944ஆம்வருஷம்,அக்டோபர் மாதம்,31ஆம்தேதி,செவ்வாய்க்கிழமைமுதல் ஸ்ரீ இராமேசுவரானந்த கிரி சுவாமிகள், ஸ்ரீசிவசுப்பிரமணியர் மடாலயத்திற்கு, இரண்டாம் மடாதிபதியாக இருந்து, ஸ்ரீசிவசுப்பிரமணியர் பூசைகளைச் சிறப்பாக நடைபெறச் செய்து கொண்டு, ஸ்ரீ சிவானந்தயதீந்திர சுவாமிகளின் சமாதி சிவலிங்கத்திற்கு நித்தியப்படி பூசைகள் செய்தலுடன்,மூன்றும் நாள் விசேடபூசைகளும், சிறப்புறச் செய்துமுடித்து, ஸ்ரீசுவாமிகள் விதேக முக்தியடைந்த நாள் முதலாகப் பத்தாம் நாளாகிய,தாரணவருஷம், ஐப்பசிமாதம்,24ஆம் தேதி. (ஆங்கிலம்1944ஆம் வருஷம், நவம்பர் மாதம், 9ஆம்தேதி) குருவாரம் நடைபெறக் கூடிய பத்தாம்நாள் மோக்ஷதீபவிழாவைக் குறிப்பிட்ட அழைப்புப் பத்திரிகைகள் அச்சிட்டு, கோவிலூர் மடாலயம், திருக்களர் மடாலயம் முதலிய பல மடாலயங்களின் அதிபதிகளாகிய

நூல்
பிரிவு
எண்

33. குரு மகாசன்னிதானங்கட்கும், பல பக்தர்கட்கும் அனுப்பித் தெரிவித்துப் பலமடாதிபதிகளாகிய குருமகாசன்னிதானங்களும், பல பக்தர்களும் வந்து கூடியிருந்தபோது, மேற்படி பத்தாம்நாள் பகலிலும், இரவிலும் விதிமுறைப்படி சகல விதமான, அபிஷேக, அலங்கார, ஆராதனைப் பூசைகளும், மகேசுவர பூசைகளும், சகலவித உபசாரங்களுடனே மோக்ஷதீபவிழாப் பூசைகளும் சிறப்புறச் செய்தனர்.

வந்திருந்த பல மடாதிபதிகளான குருமகா சன்னிதானங்கட்கும், பல பக்தர் கட்கும், செய்யத் தக்க மரியாதைகள் அனைத்தையும், குறைவின்றி நிறைவாகச் செய்தனர்.

34. [ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயத் திருப்பணி தொடங்கிச் செய்வதற்காகப் பாலாலயம் அமைத்துப் பூசைகள் புரிதல்.]

பின்னர் ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயத்தின் திருப்பணி, கருங்கல் திருப்பணியாகச் செய்ய விரும்பிப், பாலாலயம் அமைத்து, அதில் ஸ்ரீசுவாமிகளின் சமாதி பீடத்தில் வைத்த சிவலிங்கத்திலிருந்த குருவின் தெய்வீக சாந்நித்திய அருட்கலையை, விதி முறைப்படி கும்பத்தில் கலாகர்ஷணம் (குருவின் அருட்கலையைக்கும்பத்தில் இறங்கு

நூல்
பிரிவு
எண்

34. மாறு அழைத்து அமைத்தல்) செய்து, மேற்படி சிவலிங்கத்தை எடுத்து பாலாலயத்தில் விதிமுறைப்படி அமைத்து, கும்பநீர் அபிஷேகம் செய்வதன் மூலமாகக், குருவின் தெய்வீக சாந்நித்திய அருட்கலையைச் சிவலிங்கத்தில் இறங்குமாறு செய்து, சிறப்பாகப் பூசைகள் புரிந்தனர்.

பின்னர் நித்தியப்படி பூசைகளும், விசேட நாள் விசேடபூசைகளும், ஆண்டுக் குருபூசைகளும் சிறப்புறப் புரிந்து வந்தனர்.

35. [ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயத் திருப்பணி தொடங்கிச் செய்தல்]

பின்னர் ஸ்ரீ இராமேசுவரானந்த கிரி சுவாமிகள் ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயத்தின் கருங்கல் திருப்பணி செய்யத் தொடங்கித், தமது முயற்சியினாலும், பக்தர்களின் முயற்சியினாலும், கருங்கல்லினால் கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றின் திருப்பணிகளைச் சிறந்த சிற்பிகளைக் கொண்டு சாஸ்திர விதிமுறைப்படி செய்துகொண்டிருந்தனர்.

36. [ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் விதேக முக்தி அடைதல்.]

பின்னர் ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகள் ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின்

நூல்
பிரிவு
எண்

36. சமாதி ஆலயத்தின் கருங்கல் திருப்பணி செய்து கொண்டிருந்த காலத்தில் திருப்பணி முக்கால் பகுதி முடிவுபெறுங்காலத்தில், தமிழ் வருஷம் சர்வதாரி வருஷம், புரட்டாசி மாதம், 2ஆம்தேதி (ஆங்கிலம்1948ஆம் வருஷம், செப்டம்பர்மாதம், 17ஆம் தேதி) வெள்ளிக்கிழமை, பூர்வபக்ஷம், பௌர்ணமிதிதி, பூரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், விதேகமுக்தி அடைந்தார்கள். அப்போது மகா.கோவிந்தசுவாமிகள்வெளியூரில் இருந்தபடியால், அவருக்காக, அங்கிருந்த சில சாதுக்களும், தி. மு. அண்ணுமலை முதலியார், பு.சா. குப்புசாமிமுதலியார், பு.சா. வெங்கடேச முதலியார், முதலிய எல்லா முதலியார்களாகிய பக்தர்களும், மற்றவர்களும் இருந்து, ஸ்ரீ இராமேசுவரானந்த கிரிசுவாமிகளின் தெய்வீகத்திரு மேனிக்கு விதிமுறைப்படியான சகலவித அபிஷேக, அலங்கார, ஆராதனைப்பூசைகளும் சிறப்பாகச் செய்து, ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதிக்கு முன்புறம் நந்திகேசுவரரை அமைக்கும் ஸ்தானத்தில், விதிமுறைப்படியான சகலவித உபசார பூசைகளுடன் சமாதி வைத்து, அதன்மேல் பீடத்தில் சிலையினுலான நந்திகேசுவரர் திருவுருவத்தை அமைத்து, அன்றைய பூசைகளையும், நித்தியப்படி பூசைகளையும், மூன்றும் நாள் விசேடபூசைகளையும், பத்தாம்நாள் மோக்ஷதீபவிழா விசேட பூசைகளையும் விதிமுறைப்படி சிறப்பாகச்செய்து

நூல்
பிரிவு
எண்

36. முடித்துப் பின்பு ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகளின் சமாதியின் மேல் பீடத்தில் அமைத்த சிலா நந்திகேசுவரரான ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகளின்தெய்வீக சாந்நித்திய அருட்கலையைக் கும்பகலாகர்ஷணம் செய்து, அந்தச் சிலா நந்திகேசுவரரின் திருவுருவத்தை எடுத்துப் பாலாலயத்தில் உள்ள, ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சிவலிங்கத்தின் முன்புறம் அமைத்த சிறந்த பீடத்தின் மேல் விதிமுறைப்படி அமைத்து, மேற்படிகும்ப கலாகர்ஷணம் செய்த புனிதநீரை இந்தச் சிலா நந்திகேசுவரரின் திருவுருவத்தில் அபிஷேகம் செய்வதன்மூலம், அதில் ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகளின் தெய்வீக சாந்நித்திய அருட்கலையை, இறங்குமாறு செய்து, சிறப்பாகப் பூசைகள் புரிந்தனர்.

37. [மகா. கோவிந்த சுவாமிகள் (அடியேன்) மூன்றும் மடாதிபதியாக இருந்து, ஸ்ரீ சிவசுப்பிரமணியர் பூசைகள், ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள், ஸ்ரீ இராமேசுவரானந்தகிரி சுவாமிகளின் பாலாலயங்களின் பூசைகள் புரிதல், ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி யாலயத்தின் குறை திருப்பணி முதலியவைகளை நிறைவேற்றுதல் முதலிய காரியங்களைச் செய்து வருதல்.]

மகா. கோவிந்த சுவாமிகள் (அடியேன்) கோவிலூர் மடாலயம், ஏழாம் குருமூர்த்தியாகிய

நூல்
பிரிவு
எண்

37. ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளை முதல் குருவாக அடைந்து, அங்கு நடைபெறும் பாட முறையானபதினாறு நூல்களையும், உபதேச பாடமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த பின்னர், ஸ்ரீ சிவானந்தயதீந்திர சுவாமிகள் திருக்களர் ஸ்ரீ ஆண்டவர் ஆலயம் வந்திருந்த போது, அவர்களை இரண்டாம் குருவாக அடைந்து சமஸ்கிருத ''ஜீவன் முக்தி விவேகம்'' என்னும் சிறந்த வேதாந்த ஞான அநுபூதி நூலை உபதேசபாடமாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்திருந்தனர். இவ்வாறு ஸ்ரீ. மகாதேவ ஞானதேசிக சுவாமிகளாகியமுதல் குருவுக்கும், ஸ்ரீ சிவானந்த யதீந்திரசுவாமி களாகிய இரண்டாம் குருவுக்கும் சீடரான, மகா கோவிந்த சுவாமிகள் (அடியேன்) ஸ்ரீ சிவானந்த யதீந்திரசுவாமிகளின் திருவருளின்படி, சர்வதாரி வருஷம், புரட்டாசி மாதம், 2ஆம் தேதி (ஆங்கிலம் 1948ஆம் வருஷம், செப்டம்பர் மாதம், 17ஆம்தேதி, வெள்ளிக்கிழமை முதல் ஸ்ரீ. சிவ சுப்பிரமணியர் மடாலயத்திற்கு மூன்றும் மடாதி பதியாக அமைந்து எல்லாமுதலியார்களான அன்பர்களின் உதவிகளுடன் ஸ்ரீ சிவசுப்பிர மணியரின் நித்தியப்படி பூசைகளையும் விசேட நாள்களின் பூசைகளையும், ஸ்ரீசிவானந்தயதீந்திர சுவாமிகள், ஸ்ரீ. இராமேசுவரானந்தகிரி சுவாமி களின் பாலாலய நித்தியப்படி பூசைகளையும், ஆண்டுக் குருபூசைகளையும், சிறப்பாக நடை

நூல் பிரிவு எண்

37. பெறச் செய்து கொண்டும், வேண்டிக் கொண்ட அன்பர்கட்கு வேதாந்த சாஸ்திர உபதேசபாட போதனைகள் செய்து கொண்டும் இருந்து, ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி யாலயத் திருப்பணிகளில் குறைவாக இருந்த திருப்பணிகளையும், கர்ப்பக்கிரக மேல்விமான கோபுரத்தையும், தன் முயற்சியினாலும், தி.மு. அண்ணாமலை முதலியார், பு.சா. குப்புசாமி முதலியார், பு. சா. வெங்கடேச முதலியார், முதலிய எல்லா முதலியார்களாகிய அன்பர் களின் முயற்சியினாலும், சிறந்த சிற்பிகளைக் கொண்டு சிறப்பாகச் செய்து முடித்து, முன்னமே வாங்கி வைத்திருந்த, ஸ்ரீ பாண சிவலிங்கத்திற்கு உரியதான சிலாஆவுடையார், அதற்கு உரியதான சிலாநந்தி, சிலா பலிபீடம், ஸ்ரீ. விநாயகர் சிலா விக்கிரகம், ஸ்ரீ பாலசுப்பிர மணியர் சிலாவிக்கிரகம். அவற்றிற்குஉரியதான சிலா பீடங்கள் ஆகியவைகளைச் சிறந்த சிற்பி களைக் கொண்டு புதியதாகவும், சிறந்ததாகவும் செய்து அவற்றைப் புதியதாக அமைத்தகருங்கல் திருப்பணி சமாதி ஆலயத்தில் அமைக்கத்தக்க இடங்களில் அமைத்துக் கொண்டு, கும்பாபிஷே கத்திற்கு வேண்டிய சகல வஸ்துக்களையும் தயாரித்து வைத்துக் கொண்டனர்.

நூல்
பிரிவு
எண்

38. [மகா. கோவிந்த சுவாமிகள், எல்லா முதலியார் களான அன்பர்களின் உதவிகளுடன், ஸ்ரீ. சிவா னந்த யதீந்திர சுவாமிகள். ஸ்ரீ இராமேசுவரானந்த கிரிசுவாமிகளின் சமாதியாலயத்தின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்தல்.]

பின்னர், மகா. கோவிந்தசுவாமிகள் (அடியேன்) அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்வதற்கு உரிய சுப நாள் கணிப்பதற்காக முயற்சித்து. சிறந்த சோதிடவல்லுனர்களைக் கொண்டு, தமிழ் வருஷம் மன்மத வருஷம், தை மாதம், ஏழாம் தேதி (ஆங்கில வருஷம் 1956 ஆம் வருஷம், ஜனவரி மாதம், இருபதாம் தேதி) வெள்ளிக்கிழமை, பூர்வபக்ஷம், சப்தமி திதி, ரேவதி நக்ஷத்திரம், சித்த யோகம், கூடிய சுப தினத்தில், சூரிய உதயாதி நாழிகை $6\frac{1}{4}$க்குமேல் $7\frac{1}{2}$க்குள் (மணிசூரிய உதயத்திற்கு, 6மணி25 நிமிஷம் ஆதலால், 8மணி 55 நிமிஷத்திற்கு மேல், 9 மணி 25 நிமிஷத்திற்கு உள்) கும்ப லக்கின விருஷப புஷ்கர அம்சசுபகாலத்தை, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்யும் சுப காலமாகத் தீர்மானம் செய்து, இந்தச் சுபகால நாளைக்குறிப்பிட்டு அஷ்டபந்தன மகா கும்பா பிஷேக அழைப்புப் பத்திரிகைகள் அச்சிட்டு, அப்பத்திரிகைகளைக் கோவிலூர் மடாலயம், திருக்களர் மடாலயம் முதலிய பல மடாலயங் களின் அதிபதிகள் ஆகிய குருமகா சந்திதானங்

நூல்
பிரிவு
எண்

38. களுக்கும், உள்ளூர் அன்பர்களுக்கும், மற்ற சென்னை முதலிய வெளியூர்களில் உள்ள அன்பர்களுக்கும் அனுப்பித் தெரிவித்துப், பல மடாதிபதிகளாகிய குரு மகாசந்நிதானங்களும், உள்ளூர் அன்பர்களும், வெளியூர் அன்பர்களும் வந்து கூடியிருந்த போது, எல்லா முதலியார் களான அன்பர்களின் உதவிகளுடன், கும்பா பிஷேக விதிப்படியான யாகசாலைகளை அமைத்து, கும்பங்களில் பாலாலய மூர்த்திகளைக் கலா கர்ஷணம் செய்து, அவைகளை யாகசாலையில் அமைக்கத் தக்க இடங்களில் அமைத்து, யாக சாலை பூசைகளும், மற்ற எல்லா விதமான காரி யங்களும், பூசைகளும், சிறப்பாகச் செய்து மேற் கூறப்பெற்ற, தமிழ் வருஷம் மன்மத வருஷம், தை மாதம், ஏழாம் தேதி, (ஆங்கில வருஷம். 1956 ஆம் வருஷம், ஜனவரி மாதம், இருபதாம் தேதி) வெள்ளிக்கிழமை, பூர்வபக்ஷம், சப்த மிதிதி, ரேவதி நக்ஷத்திரம், சித்த யோகம் கூடிய சுபதினத்தில், சூரிய உதயாதி நாழிகை $6\frac{1}{4}$க்கு மேல் $7\frac{1}{2}$ க்குள் (மணி 8-55க்குமேல் 9-25க்குள்) கும்ப லக்கின விருஷப புஷ்கர அம்ச சுபகாலத்தில், விதிமுறைப்படியான பூசை களுடன் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்தனர்.

அதன் பின்னர், வந்திருந்த மடாதிபதி களான குருமூர்த்திகளுக்கும், மற்ற அன்பர் களுக்கும் செய்ய வேண்டிய மரியாதைகள்

நூல்
பிரிவு
எண்

38. அனைத்தையும் குறைவின்றி நிறைவாகச் செய்து எல்லோரும் திருப்தியடையுமாறு செய்து முடித்தனர்.

பின்னர், செய்ய வேண்டிய மண்டலா பிஷேக விசேஷபூசைகளும் விதிப்படி சிறப்பாகச் செய்து முடித்தனர்.

இவ்வாறு கும்பாபிஷேகம் செய்யப் பெற்ற ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதி ஆலயத்தின் மூலஸ்தானமாகிய கர்ப்பக்கிர கத்தில் உள்ள ஸ்ரீ பாணசிவலிங்கத்தின்தோற்றப் படமும், மகாமண்டபத்தில் உள்ள ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ பாலசுப்பிரமணியர், ஸ்ரீ நந்திகேசுவரர், பலிபீடம் ஆகியவைகள் அமைந்த தோற்றப் படமும், ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சமாதியாலயத்தின் வெளிப்புறம் கர்ப்பக் கிர கத்தின் மேல் அமைந்த விமான கோபுரத்தின் தென்புறத்தோற்றப் படமும், இந்நூலின் முன் பகுதியில் சேர்க்கப் பெற்றுள்ளன.

39. [ஸ்ரீ மகா. கோவிந்த சுவாமிகள் (அடியேன்) மடாலய, சமாதியாலயங்களின் நிர்வாகம் செய்து வருதல்.]

பின்னர், ஸ்ரீ மகா. கோவிந்த சுவாமிகள் (அடியேன்) ஸ்ரீ சிவசுப்பிரமணியர் மடாலயத்தின் நித்தியப்படி பூசைகளையும், விசேடநாள் பூசை

நூல்
பிரிவு
எண்

39. களையும், ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகள், ஸ்ரீ இராமேசுவரானந்த கிரிசுவாமிகள், ஸ்ரீ கிருஷ்ணனந்த சுவாமிகள், சமாதியாலயங்களின் நித்தியப்படி பூசைகளையும், விசேடநாள் பூசைகளையும், ஆண்டுக்குருபூசைகளையும், தனது முயற்சியினுலும், பக்தர்களாகிய பு.சா. குப்புசாமி முதலியார், பு.சா. வெங்கடேசமுதலியார் ஆகிய சகோதரர்களின் முயற்சியினுலும் சிறப்பாக நடைபெறச் செய்துகொண்டுவருகின்றனர்.

40. [மகேசுவர பூசை நிலையம் அமைத்தலும், அதில் மகேசுவர பூசைகள் நடத்தலும்.]

பின்னர், ஸ்ரீ மகா. கோவிந்த சுவாமிகள் (அடியேன்), ஸ்ரீ சிவானந்தயதீந்திரசுவாமிகளின் ஆண்டுக்குருபூசைகளுக்கு வருகின்ற மடாதிபதிகளான குரு மூர்த்திகளுக்கும், அன்பர்கட்கும், மகேசுவர பூசை செய்வதற்குப் போதிய இடவசதியில்லாததையறிந்து, தனது முயற்சியினுலும், பக்தர்களாகிய, பு.சா. குப்புசாமி முதலியார், பு.சா. வெங்கடேசமுதலியார் ஆகிய சகோதரர்களின் முயற்சியினுலும் சிறந்த முறையில் மகேசுவரபூசை நிலையம் அமைத்து, அதில் ஆண்டுக் குரு பூசைகளுக்கு நடைபெற வேண்டிய மகேசுவர பூசைகள் சிறப்பாக நடைபெறச் செய்து கொண்டு வருகின்றனர்.

நூல்
பிரிவு
எண்

40. [மேற்படி மகேசுர பூசை நிலையத்தின் முன்புறச் சுவற்றில் பதிக்கப்பெற்ற கல் வெட்டின் நகல் வருமாறு.]

உ
மகேசுர பூசை நிலையம்
ஏகாம்பரகுப்பம் பேட்டை
ஸ்ரீ சிவசுப்பிரமணிய மடத்தைச் சேர்ந்தது.
தொடக்கம்:- பராபவஞு வைகாசிமீ 19உ புதன்
1-6-1966
திறப்பு - சௌமியஞு ஐப்பசிமீ 8உ வெள்ளி
24-10-1969
மேற்படி மடாதிபதி :
அத்வைத சித்தாந்தப் பிரகாசகர்,
ஸ்ரீ மகா. கோவிந்த சுவாமி அவர்களால்,
கட்டப்பெற்றது.

41. [ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகளின் சீடர்கள், பக்தர்களின் நிலைமை.]

ஸ்ரீ சிவானந்த யதீந்திர சுவாமிகளிடம் ஆசியுடன் கூடிய வேதாந்த பக்தி ஞான சாத்திர உபதேச போதனைகள் கேட்ட சீடர்களின் நிலைமையும், ஆசி பெற்ற பக்தர்களின் நிலைமையும், வருமாறு.

சீடர்கள் பலர் வைராக்கிய ஆத்மஞான அப்பியாசஞ் செய்து, ஆத்மஞானப் பேரின்ப நிலையுற்றுச் சிறந்து விளங்குகின்றனர்.

நூல்
பிரிவு
எண்

41. பக்தர்கள் பலர் ஆசி வழங்குதல் பெற்றுத் தமக்குள்ள மனக்குறைகள் நீங்கி, ஆத்மஞானப் பேரின்ப நிலையுறுவதற்குத் தகுதியுள்ளவர் களாகிச் சிறந்து விளங்குகின்றனர்.

42. [ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் தாம் இயற்றிய, ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் புராணம்; என்னும், திருக்களர் ஆண்டவர் சரித்திர வசனத்தின். 29ஆம் அத்தியாயத்தில், தாம் எழுதிய தமது சுயசரித்திரம்-வருமாறு.]

சிவானந்த சுவாமிகள் சரண் அடைதல்.

மற்றும் வேதாரணியத்தில் அகம்அடியர் குலத்தில் சாமித்தேவர், மதுரம்மை என்பவர் வயிற்றில் உதித்து, இளமையில் தமிழ் கற்று, முன்செய்த நல்வினைப்பயனால் இளமையிலேயே பல பெரியார்களை அடைந்து, யோகாப்பியாசம் முதலியவற்றை மனந்தூய்தாம் வண்ணம் பழகிப் பின்னர்ச் சண்முகக் கடவுளின் தண்ணருளால் கோயிலூரை யடைந்து, வீரசேகரப் பெருமானர் திருவடியைச் சரணடைந்து, அன்போடு இவ் வெந்தையார்க்கு ஆத்தம் முதலிய பணிகளைச் செய்து கொண்டு, விதிப்படி வேதாந்த நூல்களைப் பாடங்கேட்டுத் தெளிந்து சிந்தித்துக் கொண்டு, வாரணசி (காசி) சென்று விதிப்படி பரம ஹம்ச சந்நியாசம் பெற்றுக் கொண்டு, எந்தையாரின் திருவடித் திறத்தால், வடமொழியில் வியா கரணம், தர்க்கம் முதலிய கருவி நூல்களையும்,

நூல்
பிரிவு
எண்

42. பூர்வ மீமாஞ்சை முதலிய உபாங்க நூல்களையுங் கற்று, உத்தர மீமாஞ்சை நூல்கள், அத்வைத சித்தி, கண்டன கண்ட காத்தியம் முடிவாயுள்ள வற்றையுங் கற்றுணர்ந்து, அங்குள்ளார்க்கும் ஓதிக்கொண்டிருக்க, இவ்வீரசேகரப் பெருமானுர் திருவருள் ஈண்டு இழுத்து வர, இங்குக்

★"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென்
கர்மத்தை என்சொல்லுகேன்? மதியையென்
சொல்லுகேன்?
கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன்; கர்மமொருவன்
நாட்டினு லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன்; வடமொழியிலே
வல்லா னொருத்தன்வர வுந்திரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தை"

என்னும் தன்மையை யுடைய அடியேனையும் வீரசேகரப் பெருமானுடைய மாணுக்கர் கணங்களுள் ஒருவனுகச் சொல்வார்கள். (என்பதாம்).

★"கல்லாத பேர்களே" என்னும் தலைப்பையுடைய இந்தப் பாடல், தாயுமான சுவாமிகள் பாடல், "சித்தர்கணம்" என்னும் தலைப்பில் உள்ள பாடல்களில் 10ஆம் பாடல் ஆகும். இப்பாடலையே சுவாமிகள் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

நூல்
பிரிவு
எண்

43. [ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் தமிழில் இயற்றிய நூல்கள்.]

1. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் புராணம்; 1430 கவிகள்-கொண்ட பெரிய வரலாற்றுச் சிறப்புடைய நூல்.

2. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் புராண வசனம்.
(ஸ்ரீ. திருக்களர் ஆண்டவர் சரித்திர வசனம்).

3. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் புராணசாரப் பஞ்ச ரத்தினம்.

4. திருக்களர். ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் தோத்திரப் பத்து.

5. திருக்களர் ஸ்ரீ. வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் பிள்ளைத் தமிழ்; கவிகள். 100.

6. கோவிலூர் நால்வர் நான்மணி மாலை; கவிகள். 40.

7. ஏகாம்பரக் குப்பம் பேட்டை மடாலயம், ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பத்து.

8. தர்மபுரி, குமாரசாமிப் பேட்டை, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமி மடாலயம்,
ஸ்ரீ ஆதிகுரு தக்ஷிணா மூர்த்திப் பத்து.

நூல் பிரிவு எண்

43. 9. ஸ்ரீஜகத்குரு சங்கரபகவன் திக்விஜய சாரம் என்னும் அருட்பஞ்சரத்நம்.

10. ஸ்ரீஜகத்குரு சங்கரபகவன் திருவருட் பத்து.

11. ஸ்ரீசங்கர நாமாவலி.

[மேற்படி எண் 8 முதல் 11 வரையுள்ள, நான்கு நூல்களும், தர்மபுரி, குமாரசாமிப்பேட்டை, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமி மடாலயம், ஆங்கிலம் 1929ஆம் வருஷம், வெளியீடான "தோத்திர மஞ்சரி" என்னும் தொகுப்பு நூலில் அச்சாகியுள்ளன.]

12. இராயவேலூர், ஸ்ரீதோபா சுவாமிகள் புராணவசனம்.

13. மேற்படி, ஸ்ரீதோபா சுவாமிகள் அருட் பத்து.

14. சென்னை, வியாசர்பாடி, ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரம்.

15. மேற்படி, ஸ்ரீகரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் தேசிகமணிப் பத்து.

16. மேற்படி, ஸ்ரீகரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் திருநாம சங்கீர்த்தனம். (பத்துக்கவி).

17. பொதட்டூர்ப் பேட்டை மடாலயம், ஸ்ரீ சாந்தி விநாயகர் போற்றிப் பத்து.

43. 18. சென்னை. திருவொற்றியூர்த் தலபுராண சாரம். (முன்னைய புராணங்களிலிருந்து தொகுப்பு நூல்).

19. எட்டிக்குடி, ஸ்ரீ சுப்பிரமணியர் தலபுராணம் (முன்னோர் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்ததிலிருந்து தொகுப்பு நூல்).

20. திருப்பெருந்துறை (ஆவுடையார் கோவில்) ஸ்ரீ ஆத்மநாதர் லீலை. (முன்னோர் சமஸ்கிருதத்திலிருந்து, தமிழில் மொழிபெயர்த்ததிலிருந்து தொகுப்பு நூல்.)

21. சிவஞானபோத சாரம்; சிவஞானபோத மூலம், பதவுரை,சிவானந்தக் குறிப்புரையுடன் கூடியது.

22. ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் சமய சமரச நன்னிலைத் தீர்ப்பு.

ஸ்ரீ தாயுமான சுவாமிகள் ''எங்கும் நிறைகின்ற பொருள்'' என்னும் தலையங்கப் பிரிவில் பாடிய பாடல்களில் மூன்றும் பாடலாகிய ''வேதமுடன் ஆகம புராணம் இதிகாசம் முதல் வேறும் உள கலைகள் எல்லாம்'' என்று ஆரம்பிக்கும், அரிய பெரிய ஒரு திருப்பாடலின் விரிவுரை.

23. வடலூர், ஸ்ரீ ஜோதி இராமலிங்க சுவாமிகளின் சமரசக் குறிப்புகள்.

43. 24. சைவத் தெளிவு.

25. அத்வைதத் தீர்ப்பு.

26. திருமண விளக்கம்.

27. சிந்முத்திரார்த்தம்.

44. [ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பெற்ற நூல்கள்.]

1. சாமவேத சங்கிதை, சாயண பாடியம்; 2. பாகங்கள். (முன் பகுதியாகிய சம்ஹிதா பாகம்).

2. கிருஷ்ண எசுர் வேதம், தைத்திரீய சங்கிதை, சாயண பாடியம்; 10 பாகங்கள். (முன் பகுதியாகிய சம்ஹிதா பாகம்).

3. இருக்கு வேத ருத்திரம்.

4. எசுர் வேத ருத்திரம்.

5. சாம வேத ருத்திரம்.

6. சாம வேதத்தின் வச்சிர சூசிகை உபநிடதம்.

44. 7. அதர்வண வேதத்தின் கிருஷ்ண உபநிடதம்.

8. எண்கண் ஸ்ரீசுப்பிரமணியர் தலபுராணம்.

9. ஸ்ரீ சங்கர திக்கு விஜயம்.

ஸ்ரீ சுவாமிகள் இயற்றியனவும், மொழி பெயர்த்தனவும் ஆன நூல்களின் விபரங்கள் அறிந்த அளவில் கூறப்பெற்றன. இதன் மேலும் விபரங்கள் இருந்து அறிந்தவர்கள், அறிவித்தால் அன்புடன் ஏற்று மறுபதிப்பில் சேர்க்கப் பெறும்.

ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் சரித்திரம்
(சுருக்கம்).
முற்றிற்று.

——

(அநுபந்தம்=பின் சேர்ப்பு)

ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அருளிய
கைவல்லிய நவநீத நூலின் சிறப்பைக் குறிக்கும், அறிமுகம்.

ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள்
வேதாந்த சாஸ்திர பாட போதனைக் காலத்தில் கூறியது; வருமாறு.

1. சகல வேதாந்த உபநிஷதாதி சாஸ்திரங்கள் முழுவதின் சுருக்கக் கருத்துப் பொருள், கைவல்லிய நவநீத நூலில் அடங்கி யுள்ளது.

2. இந்தக் கைவல்லிய நவநீத நூல் முழுவதின் சுருக்கக் கருத்துப் பொருள், கைவல்லிய நவநீதம் (ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரைநூல்) தத்துவ விளக்கப் படலம், 19.ஆம் செய்யுளாகிய, "வாராய் என் மகனே" என்னும் தலைப்பு உடைய ஒரே செய்யுளில் அடங்கியுள்ளது. இச் செய்யுள் அவதாரிகையுடன் வருமாறு.

[(அவதாரிகை = முன்னுரை) ★ சம்சார நிவிர்த்தி உபாயம் இனி உபதேசிக்கத் தொடங்கி, அது வந்த தற்குக் காரணமும், அதற்கு அவதியும் (முடிவும்) உபதேசிக்கின்றார்.]

★ (சம்சாரம் = பிறப்பு இறப்புச் சுழற்சி)

வாராய்என் மகனே தன்னை
　　மறந்தவன் பிறந்(து)இ றந்து
தீராத சுழற்காற்(று) உற்ற
　　செத்தைபோல் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப்
　　பிரமையில் திரிவன் போதம்
ஆராயும் தன்னைத் தா(ன்)என்(று)
　　அறியு(ம்)அவ் வளவும் தானே.

இந்தச் செய்யுளின் பொருளை உணர்ந்து, ஞாபகத்தில் கொண்டு, அப்பியாசம் (பயிற்சி) செய்து, கர்த்திரு கர்ம பாவங்கழன்ற அநுபவத்திருந்து, தாஞகிய ஆன்மப் பிரம்ம சாட்சாத்கார திட அபரோக்ஷ ஞானரக்கையுறுதல் வாயிலாக, சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ மோக்ஷமாகிய, அமிர்தப் பேரின்ப வீடு அடைக (என்பதாம்).

உ

ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் உபதேசப் பொருள் கூறுதலுடன் ஆன போற்றிப் பஞ்சகம்.

ஸ்ரீ. மகா. கோவிந்த சுவாமிகள் பாடியவை.
எழுசீர் ஆசிரிய விருத்தம்.

1. நீர்மிகும் கடல்சூழ் புவியிலார் சீவர்
நித்தனும் இறைவன தருளால்
சேர்மிகும் முத்தி இன்புறு மாறு
சிறப்புறும் வேதமா திகளைப்
பேர்மிகும் தமிழில் மொழிபெயர்த் தளித்துப்
பேறுப தேசமும் புரிந்த
தேர்மிகும் குருவாம் திருசிவா னந்தத்
தேசிகர் திருவடி போற்றி.

2. ஈசனின் கருமோ பாசனை புரிந்து
இதயமார் பாபவிட் சேப
★ஏசற இருந்தா வரணமற் றுயர்வீட்
டின்புறச் சீவனும் பரனும்
ஆசற ஏகம் என்றறி எனக்கை
அமைத்தசிந் முத்திரை காட்டும்
தேசுறும் குருவாம் திருசிவா னந்தத்
தேசிகர் திருவடி போற்றி.

★ஏசற, ஏசு—அற = குற்றம் நீங்க.

3. ஓங்குமா னந்த வீடுயாங் குளதோ
உறுவதெவ் வாறென உள்ளம்
ஏங்குதல் மயலாம் வீடது யாண்டும்
இலைமன வாசனுட் சயமே
பாங்குறும் வீடாம் அதுவெனும் பரம்நீ
பரமுற வீடுறும் என்னும்
தேங்கருள் குருவாம் திருசிவா னந்தத்
தேசிகர் திருவடி போற்றி.

4. ஒருகண வாணுள் கொண்டிடக் கோடி
உறுநிதி கொடுப்பினும் கூடா
அருமைவா ணளை வீண்கழித் திறத்தல்
அறிவிலா விலங்கியல் அன்றோ
மருவெலாக் கணமும் பரநிலை பொருந்தி
மரணமில் வீடுறென் றுரைத்துத்
திரமருள் குருவாம் திருசிவா னந்தத்
தேசிகர் திருவடி போற்றி.

5. ★ அனகதன் ஆன்ம நிட்டையில் ஓர்கால்
அற்பமார் மறதியே மரணம்
தனைமற வாமை சுகத்துவாழ்(வு) என்று
‡சனத்சுசா தீயமோ துதலால்
உனைமற வாத நிட்டைவாழ் வுறலால்
உன்சுகத தமிர்தவீ டடையித்
தினமெனும் குருவாம் திருசிவா னந்தத்
தேசிகர் †திருவடி போற்றி.

(அடிக் குறிப்புகள் பின்பக்கம்)

★அனகதன், அன்-அக-தன் - அகங்காரம் அற்ற தனது.

‡ சனத்சுசாதீயர் இயற்றிய, ''சனத்சுசாதீயம்'' என்னும் சமஸ்கிருத நூல். இதன் இப்பொருள்; ஸ்ரீ ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள், சமஸ்கிருதத்தில் இயற்றிய, விவேக சூடாமணியின் தமிழ்க் கவிநூல்; ''சொருபநிட்டையை ஓர் காலும் சொற்பமும் தவிர வொண்ணு'' என்னும், தலைப்புடைய கவியாதிகளிலும் கூறப்பெற்றுள்ளது.

† திருவடி போற்றி - திருவடிக்கு வணக்கம்.

போற்றிப் பஞ்சகம் முற்றிற்று.

ஸ்ரீ. வீர. சிவானந்த யதீந்திர சுவாமிகள் சரித்திரம்
(சுருக்கம்).

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	7	மகிழ்ந்திருந்தனர்	மகிழ்ந்திருந்தனர்.
9	13	மகிழ்த்து	மகிழ்ந்து
12	1	ஞாநபனந்தபுரி	ஞாநானந்தபுரி
13	3	முதவிய	முதலிய
22	23	விபரங்களும்	விபரங்களும்,
23	24	அன்றை	அன்றைய
28	7	ஸ்ரீ இராமேசுவரானந்த	ஸ்ரீஇராமேசுவரானந்தகிரி
48	6	பெயர்க்கப்பெற்ற	பெயர்த்த